பக்கங்கள் - 16
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka
மின்னிதழ்
# வலம்புரி
Valampurii
E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 சித்திரை 24 வியாழக்கிழமை (07.05.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 140

## நேற்று தொற்று, இன்று இல்லை பரிசோதனையில் குழப்பம்

### கொரோனா பெறுபேறுகள் கிடைப்பதில் புதிய சிக்கல்

(கொழும்பு)
கொழும்பு ராஜகிரிய மற்றும் கொலன்னாவையை சேர்ந்த இருவர் மற்றும் தேசிய வைத்தியசாலை தாதி ஆகியோருக்கு கொரோனா தொற்று இல்லை என்று நேற்றைய பரிசோதனைகளில், தெரியவந்துள்ளதாக சுகா 02

### எதிர்வரும் திங்கள் முதல் நாடு வழமைக்கு திரும்பலாம்

## கொரோனாவுடன் வாழ்ந்து கொண்டே அனைத்தையும் கடந்து செல்ல வேண்டியுள்ளது

### அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்த்தன

(கொழும்பு)
எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் நாடு வழமைக்கு திரும்பலாம் என நம்பிக்கை வெளியிட்ட அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்த்தன கொரோனாவுடன் வாழ்ந்து கொண்டே அனைத்தையும் கடந்து செல்ல வேண்டியுள்ளது என்றும் குறிப்பிட்டார். 02

### போர்க் குற்றஞ்சாட்டப்பட்ட இராணுவ அதிகாரிகளால்

# இலங்கை தற்போது நிர்வகிக்கப்படுகின்றது

### விளக்கப்படத்துடன் ஐஸ்மின் சூக்கா குற்றச்சாட்டு



(ஜெனிவா)
போர்க் குற்றஞ்சாட்டப்பட்ட இராணுவ அதிகாரிகள் கொண்ட ஒரு கூட்டதையே கோட்டாபய பதவிகளில் நியமித்து இலங்கையை நிர்வகிப்பதாக விளக்கப்படத்துடன் ஜஸ்மின் சூக்கா குற்றம் சாட்டியுள்ளார்.
(02ஆம் பக்கம் பார்க்க)

## பலாலி தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்த 4 பேர்

### வீடுகளுக்கு அனுப்பிவைப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம், பலாலி தனிமைப் படுத்தல் நிலையத்தில் இருந்த 4 பேரும் முழுமையான பரிசோதனை களின் பின்னர் வீடுகளுக்கு அனுப் பிவைக்கப்பட்டுள்ளனர் என யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப் பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார். யாழ். போதனா வைத்தியசாலையில் 02

## தமிழ் அரசியல் கைதிகள் எவரையும் விடுவிக்கும் தீர்மானம் அரசிடம் இல்லை

### அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா



(கொழும்பு)
தமிழ் அரசியல் கைதிகள் எவரையும் விடுவிக்கும் தீர்மானம் எடுக்கப்படவில்லை என நீதி, மனித உரிமைகள் மற்றும் சட்ட சீர்திருத்தங்கள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித் 02

### பனையிலிருந்து

## கீழே விழுந்த குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)
பனை மரத்தில் நுங்கு பறிக்க ஏறிய இளம் குடும்பஸ்தர் ஒருவர் மரத்தில் இருந்து கீழே விழுந்து படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த நிலையில் 10 நாட்களின் பின்னர் சிகிச்சை பலனின்றி 02

### வீடுகள், அறைகளுக்கு

## வாடகை அறவிடாதீர்

### அரசு கோரிக்கை

(கொழும்பு)
கொழும்பு உள்ளிட்ட நகர்பகுதி களில் வாடகை வீடுகள், அறைகளில் தங்கியிருப்போரின் தற் 02

### சமூகத் தொற்று ஏற்படுவதைத் தடுக்க

## இறுக்கமான நடைமுறைகளை யாழில் அமுல்படுத்த திட்டம்



### யாழ்.மாவட்ட அரச அதிபர் க.மகேசன்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாண மாவட்டத்தில் சமூகத் தொற்று ஏற்படாதவாறு சில நடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்ற வேண்டியது அவசியமாக உள்ளது என யாழ். 02

## 800 ஐ நெருங்கியது

(கொழும்பு)
கொரோனா வைரஸ் (Covid-19) தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 26 பேர் நேற்று புதன் கிழமை அடையாளம் 02

### பலாலியில் தனிமைப்படுத்தலில் இருந்தவருக்கு

## கொரோனா தொற்று உறுதி

### போதனா பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் பலாலி தனிமைப் படுத்தல் நிலையத்தில் இருந்த ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்று இரவு உறுதிப் படுத்தப்பட்டதாக யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.
குறித்த நபர் பண்டாரகமபுர விலிருந்து பலாலிக்கு அழைத்து வரப்பட்டவராவார். நேற்று யாழ் போதனாவில் 68 பேருக்கு பரிசோ தனை செய்யப்பட்டதாக த.சத்திய மூர்த்திமேலும் தெரிவித்தார். (ம-3)

## நாடு முழுவதும் சிறப்பு பொலிஸ் நடவடிக்கை ஆரம்பம்

### பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோகண

(கொழும்பு)
நாடு முழுவதும் நேற்று புதன் கிழமை இரவு 8 மணி முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட ஊர டங்கு உத்தரவு எதிர்வரும் மே 11ஆம் திகதி அதிகாலை 5 மணி 02



## இலங்கை தற்போது நிர்வகிக்கப்...

இலங்கையின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஒரு அதிர்ச்சி தரும் எண்ணிக்கையைக் கொண்ட போர்க்குற்றம் புரிந்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட குற்றவாளிகள் மற்றும் ஊழல் செய்ததாக முன்னர் குற்றஞ்சாட்டப்பட்ட அதிகாரிகள் ஆகியோரை தனது புதிய அரசாங்கத்தின் பதவிகளில் நியமித்துள்ளதாக சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டம் தெரிவித்துள்ளது.

இந்த சட்ட ஆய்வு அமைப்பானது ஜனாதிபதி ராஜபக்ஷவின் உள்வட்டத்தினை சித்தரித்துக் காட்டும்ஒரு விளக்கப்படத்தை மூன்று மொழிகளிலும் வெளியிட்டுள்ளது.

இந்த உள்வட்டமானது ஜனாதிபதியின் கஜபாகு படையணியில் இருந்த ஆறு ஜெனரல்கள் மற்றும் பிரிகேடியர்களை உள்ளடக்குவதுடன் இவர்களை அவர் இராணுவத்தளபதி, பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி, பாதுகாப்பு செயலாளர் மற்றும் தேசிய புலனாய்வுத் தலைவர் போன்ற முக்கிய பதவிகளில் நியமித்துள்ளார்.

கஜபாகு படையணியைச் சேர்ந்த இரண்டு ஜெனரல்கள் 1989 இல் மாத்தளை மாவட்டத்தில் கோட்டாபய ராஜபக்ஷவிற்கு கீழ் நேரடியாகப் பணியாற்றினார்கள்.

இவர் மாவட்ட இராணுவ இணைப்பதிகாரியாக இருந்த வேளையில் குறைந்தது எழுநூறு சிங்களவர்கள் இராணுவம் மற்றும் பொலிஸ் காவலில் காணாமற்போயிருந்தார்கள்.

தற்போது முக்கிய உத்தியோக பூர்வ பதவிகளைக் கொண்டுள்ள பதினான்கு இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகள் கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரம் மிக்க மற்றும் அதிகம் அஞ்சப்பட்ட பாதுகாப்பு செயலாளராக இருந்த போது சிவில் போர் இடம்பெற்ற காலப்பகுதியில் அவரின் கீழ் பணியாற்றினார்கள்.

இலங்கையானது இப்பொழுது இராணுவ அதிகாரிகள் கூட்டத்தால் நிர்வகிக்கப்படுகின்றது. இவர்களில் பலர் 1989 மற்றும் 2009ம் ஆண்டுகளில் ஆயிரக்கணக்கான அவர்களது பிரஜைகள் கொல்லப்பட்டமை மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகள் ஆகியவற்றில் உடந்தையாக இருந்தமைக்காக நீதிமன்றத்தில் ஒருநாள் பதில் சொல்ல வேண்டியிருக்கும் என சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

சர்வதேச சமூகமானது முன்னர் ஜெனீவாவிலுள்ள மனித உரிமைகள் பேரவையில் தொடரான கூட்டு ஐ.நா தீர்மானங்களை அடிப்படையாகக் கொண்டு இலங்கைக்கு பேராவலுடனான ஒரு நிலைமாற்று நீதி திட்டத்தை முதலீடு செய்திருந்தது.

அதன் ஒரு பகுதியாக பாதுகாப்பு பிரிவுக்கான சீர்திருத்தம் மற்றும் மீளாய்வு மற்றும் வடிகட்டல் நடவடிக்கைகளுக்கான உறுதிப்பாடு இருந்தது.

அதிகாரத்தில் இந்த இராணுவ ஜெனரல்கள் இருக்கையில் இந்த நாடானது அரச அதிகாரிகளை அவர்களுடைய மனித உரிமைகள் பதிவுகளுக்காக மீளாய்வு மற்றும் வடிகட்டல் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்போவதில்லை என்பது தெளிவு. ஆயினும் ஜெனிவாவில் தீர்மானங்களுக்கு ஆதரவு வழங்கிய உறுப்புரிமை நாடுகள் இந்த விழுமியங்களைப் பேணுவது அவர்களின் கடமையாகும் என சூக்கா தெரிவித்தார்.

## 800 ஐ...

காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 797ஆக (ஜனவரியில் பாதிக்கப்பட்ட சீனப் பெண் உள்பட) அதிகரித்துள்ளது.

அத்துடன் நேற்று அடையாளம் காணப்பட்ட மூவருக்கு நேற்று முன்தினம் கொரோனா தொற்று இல்லை என்பது உறுதியாகிய நிலையில் அவர்கள் மூவரும் இந்தப் பட்டியலில் நீக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை 215 பேர் முழுமையாகக் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 9 பேர் உயிரிழந்துள்ளனர். 573 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-3)

## கீழே விழுந்த...

உயிரிழந்துள்ளார்.

புதுக்குடியிருப்பு மந்துவிலை சேர்ந்த ரவீந்திரன் ரவிசங்கர் (வயது - 26) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்தவராவார்.

இவர் கடந்த 25 ஆம் திகதி பனை மரத்தில் ஏறியுள்ளார் கால் சறுக்கி கீழே விழுந்ததில் கால் முறிந்ததுடன் தலையில் படுகாயமடைந்துள்ளார்.

மாஞ்சோலை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்போதனா வைத்தியசாலை திடீர் மரணவிசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3,9)

## கொரோனாவுடன் வாழ்த்து கொண்டே...

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்று அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது.

இதில் கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சரவை இணை பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன இதனைக் கூறினார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

கோவிட்-19 வைரஸ் தொற்று நோய் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு சலுகைகளை வழங்கும் வேலைத்திட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றோம். வரலாற்றில் வேறு எந்த அரசாங்கமும் முன்னெடுக்காத வகையில் பல சலுகைகளை மக்களுக்கு கொடுத்து வருகின்றோம்.

அத்துடன் கோவிட்-19 வைரஸ் பரவல் முழுமையாக கட்டுபாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. சுகாதார அதிகாரிகள் மூலமாக மிகச்சிறப்பான கட்டுப்பாட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

அத்துடன் கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் புத்தளம் உள்ளிட்ட அச்றுத்தல் என கருதிய பிரதேசங்களில் கூட கோவிட்-19 வைரஸ் கட்டுபாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ள காரணத்தினால் சமூக பரவல் இல்லை என்பது உறுதியாகியுள்ளது.

எவ்வாறு இருப்பினும் சுகாதார அதிகாரிகளின் முழுமையான ஆலோசனைகளை தொடர்ந்தும் பின்பற்ற தீர்மானிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் நாம் கொரோனாவுடன் வாழ்ந்துகொண்டே இவற்றை கடந்து செல்லவேண்டியுள்ளது.

அதேபோல் எமது எதிர்காலத்தை பலப்படுத்த பொருளாதார நடவடிக்கைகளை முன்னெடுத்தே ஆக வேண்டும். எம்மை விட மோசமாக பாதிக்கப்பட்டுள்ள நாடுகள் கூட இப்போது இயங்க ஆரம்பித்துள்ள நிலையில் நாமும் எமது பொருளாதார நடவடிக்கைகளை முன்னெடுத்தாக வேண்டும்.

ஆகவே எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை ஊரடங்கு சட்டத்தை தளர்த்துவது குறித்து மக்கள் எதிர்பார்ப்புடன் இருக்க முடியும். அடுத்து வருகின்ற நான்கு நாட்கள் கட்டுபாடுகளுடன் நிலைமைகளை கையாண்டால் திங்கட்கிழமை ஊரடங்கு சட்டம் தளர்த்தப்படும். அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது என்றார். (ம-3)

## நேற்று தொற்...

தார சேவைகள் பணிப்பாளர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அவர்களுக்கு செய்யப்பட்ட முதலாம் கட்ட பரிசோதனையில் கொரோனா தொற்று உள்ளது (Positive) என்ற பெறுபேறு கிடைத்திருந்தது.

நேற்று இரண்டாம் கட்டமாக செய்யப்பட்ட பரிசோதனை முடிவிலேயே அவர்களுக்கு தொற்று இல்லை (Negative) என்ற பெறுபேறு கிடைத்துள்ளது.

இவர்களுக்கு தொற்று எவ்வாறு ஏற்பட்டது என்பதில் பெரும் குழப்பம் இருந்து வந்த நிலையில், மாறி மாறி பெறுபேறுகள் கிடைப்பதும் புதிய குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. (ம-3)

## நாடு முழுவதும் சிறப்பு பொலி...

வரை நடைமுறையில் இருக்கும் என்று கோவிட்-19 நோயப்பரவலைக் கட்டுப்படுத்தும் தேசிய செயலணியின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோகண தெரிவித்தார்.

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறுபவர்களைக் கைது செய்ய சிறப்பு நடவடிக்கை நாடு முழுவதும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

நாட்டில் தற்போது நடைமுறையில் இருக்கும் தனிமைப்படுத்தல் சட்டத்தை அனைவரும் மதிக்க வேண்டும்.

இந்த ஆண்டு வெசாக் விழா இன்று நடைபெறும். எனினும் வெசாக் பருவத்தில் வீட்டிலேயே இருக்க வேண்டும் என்று பாதுகாப்புப் படைகள் பொதுமக்களை கேட்டுக்கொள்கின்றன என்றும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோகண கூறினார். (ம-3)

## வாடகை...

போதைய நிலைமையை கருத்தில் கொண்டு அவர்களின் மாத வாடகையை அறவிடும் விடயத்தில் மனிதாபிமான அடிப்படையில் நடந்துகொள்ளுமாறு அரசாங்கம் வீட்டு உரிமையாளர்களை கேட்டுக் கொண்டுள்ளது.

அத்துடன் இக்கால கட்டத்தில் மாத வாடகைகளை அறவிடுவதை தவிர்க்குமாறும் அல்லது வாடகையில் ஒரு பகுதியை மாத்திரம் அறிவிடுமாறும் அரசாங்கம் அவர்களை கேட்டுக்கொண்டுள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன இதனை தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

அமைச்சரவையில் மக்களுக்கு விசேட கோரிக்கையொன்றை விடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதாவது கொழும்பு உள்ளிட்ட பிரதேசங்களில் பல்கலைக்கழங்கள் செல்வோர் மற்றும் தொழிலுக்கு செல்வோர் அதிகமாக வாடகை அறைகளிலேயே தங்கியிருக்கின்றனர்.

தற்போதைய நிலைமையில் பல்கலைக்கழகங்கள், நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. இவ்வாறான நிலைமையில் அறை மற்றும் வீட்டு உரிமையாளர்கள் மாத வாடகை பணம் கேட்கலாம்.

ஆனால் இது அவர்களின் வருமானம் என்றாலும் தற்போதைய நிலைமையில் இந்த விடயத்தில் அவர்கள் மனிதாபிமான அடிப்படையில் நடக்க வேண்டும்.

சில இடங்களில் அதில் இருந்தவர்கள் தமது வீடுகளுக்கு சென்றிருந்தால் அந்த அறைகளில் இல்லாத நிலையிலும் வாடகை கேட்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. அனால் இதில் மனிதாபிமான அடிப்படையில் வாடகையில் ஒரு பகுதியை மாத்திரம் அறவிடுமாறும் அரசாங்கம் கோரிக்கை விடுப்பதாக அவர் கூறினார். (ம-3)

## பலாலி தனிமைப்படுத்தல்...

நேற்று புதன்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கடந்த முதலாம் திகதி நடத்தப்பட்ட கொரோனா வைரஸ் பரிசோதனையில் அவர்களுக்குத் தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

இந் நிலையில் அவர்கள் தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்து தத்தமது வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுவிஸ்சர்லாந்தில் இருந்துவந்த போதகர், அரியாலை தேவாலயத்தில் நடத்திய மத ஆராதனையில் கலந்துகொண்டவர்கள் பலாலி தனிமைப்படுத்தல் மையத்தில் தனிமைப் படுத்தப் பட்டிருந்தனர்.

இந்நிலையில், அரியாலை ஆராதனையில் சுவிஸ் போதகருடன் நெருங்கிப் பழகிய 16 பேர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## இறுக்கமான நடைமுறைகளை...

மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ். வணிகர் கழத்தினருக்கும் அரசாங்க அதிபருக்கும் இடையில் பொதுப் போக்குவரத்து மற்றும் வெளி மாவட்டங்களுக்குச் சென்று வருபவர்கள் எதிர்நோக்கும் பாஸ் நடைமுறை தொடர்பாக ஆராயும் கூட்டம் நேற்று புதன்கிழமை இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தின் முடிவில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், சுகாதார நடைமுறைக்கு ஏற்ப எடுக்கப்படும் நடவடிக்கைகள் மக்களின் நன்மை கருதியே என்பதுடன் 2 மாதகாலமாக முன்னெடுக்கப்படும் நடைமுறைகளை வலுப்படுத்தும் முகமாக தொடர்ந்தும் சுகாதாரத்துடன் கூடிய இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகிறது என அரசாங்க அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

இதனைவிட, கொழும்பில் இருந்து யாழிற்கு வருபவர்கள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவதாகவும், அடிக்கடி வர்த்தக ரீதியாக கொழும்புக்குச் சென்று வருபவர்களிடம் பி.சி.ஆர். பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், எதிர்காலத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் சமூகத் தொற்று ஏற்படாத வண்ணம் சில நடைமுறைகளைப் பின்பற்ற உத்தேசித்துள்ளதாகவும் அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

## தமிழ் அரசியல் கைதிகள் எவரையும் விடுவிக்கு...

தார்.

வெசாக் தினமான இன்று கைதிகள் விடுதலையாகவுள்ள நிலையில் அது குறித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

வெசாக் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியினால் பொது மன்னிப்பு வழங்கும் வகையில் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் நன்னடத்தை அடிப்படையில் 223 கைதிகளை விடுதலை செய்யவும் அதேபோல் விசேட கவனம் செலுத்தப்பட்டு சிறிய குற்றங்களில் ஈடுபட்டவர்களின் 83 பேரையும் விடுதலை செய்ய இணக்கம் காணப்பட்டுள்ளது. எனினும் இவர்களில் பாரிய குற்றங்களில் ஈடுபட்ட, போதைப் பொருள் கடத்தல் செயற்பாடுகளில் ஈடுபட்ட எவரும் விடுவிக்கப்படவில்லை.

போதைப்பொருள் கடத்தல்களை பாரிய அளவில் முன்னெடுக்கும் குற்றவாளிகள் சிலர் இப்போதும் சிறைச்சாலையில் உள்ளனர். ஆனால் அவர்களுக்கு பொதுமன்னிப்பு என்பது ஒருபோதும் வழங்கப்படாது.

அதுமட்டும் அல்ல இவ்வாறு நாட்டுக்குள் போதைப் பொருள்களை கொண்டுவரும் நபர்களை தடுக்கவும், நாட்டில் போதை பொருள் பாவனையை கட்டுப்படுத்தவும் இவ்வாறான குற்றவாளிகளுக்கு தூக்குத்தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதே எனது நிலைப்பாடு. இது குறித்து ஜனாதிபதியுடன் நாம் பேசி ஒரு தீர்மானம் எடுப்போம் என்றார்.

ஊடகவியலாளர் ஒருவர் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து தமிழ் தேசிய கூட்டமைப்பினர் பிரதமரிடத்தில் வலியுறுத்தியுள்ளனர். அவ்வாறு எவரையும் விடுவிக்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதா? என கேள்வி எழுப்பினார். அதற்குப் பதில் வழங்கிய அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா,

ஜனாதிபதி அவ்வாறு எந்த காரணிகள் குறித்தும் எமக்கு அறிவிக்கவும் இல்லை. இது பொதுவாக வெசாக் தினத்தில் பொது மன்னிப்பில் விடுதலை செய்யப்படும் நடவடிக்கையாகும்.

நீண்டகால தடுப்பில் குறிப்பாக பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபட்டதாக தடுத்து வைக்கப்பட்டவர்கள் குறித்து தீர்மானம் எடுக்க முடியாது. அவர்களை விடுதலை செய்வது ஜனாதிபதியின் தீர்மானத்திற்கு அமைய இடம்பெறும் என்றார். (ம-3)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.05.2020 இல் பதிவேற்றம் செய்யப்பட்டது.

- சட்டத்துக்கு புறம்பான முறையில் -

# மதுபானம் விற்ற மூவர் உரும்பிராயில் கைது

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் பொக்கணைப் பகுதியில் வீடொன்றில் சட்டத்துக் குப் புறம்பாக மதுபான விற்பனை யில் ஈடுபட்டனர் என்ற குற்றச் சாட்டில் மூன்று பேர் கைது செய் யப்பட் டுள்ளனர் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களிடமிருந்து 91 போத் தல்கள் (கால் போத்தல் அளவு டைய) மதுபானம் கைப்பற்றப்பட் டன என்று பொலிஸார் கூறினர்.

கோப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த கைது நடவடிக்கை முன் னெடுக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களை இன்று யாழ்ப்பாணம் நீதவான் முன்னி லையில் முற்படுத்த நட வடிக்கை எடுத்துள்ளதாக கோப்பாய் பொலி ஸார் தெரிவித்தனர்.

நாட்டில் கொரோனா வைரஸ் பரம்பலைக் கட்டுப்படுத்த மதுபான சாலைகளை காலவரையறை யின்றி மூடுவதற்கு அரசு உத்தர விட்டுள்ளது.

இந்த நிலையில் சட்டத்துக்கு புறம்பாகவும் அதிக விலையிலும் மது பானம் விற்பனை செய்யப்படு கின் றமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

# எம் வாழ்வின் ஒரு பகுதியாக கொரோனா இருக்கப் போகின்றது

## வவுனியா மாவட்ட பிராந்திய பிரதி சுகாதார பணிப்பாளர் மகேந்திரன்

(வவுனியா)

எங்கள் வாழ்க்கையில் இனி ஒரு பகுதியாக கொரோனா இருக் கவே போகின்றது என வவுனியா மாவட்ட பிராந்திய பிரதி சுகாதார பணிப்பாளர் மகேந்திரன் தெரிவித் துள்ளார்.

வவுனியா மாவட்ட செயலகத் தில் நேற்று இடம்பெற்ற கொரோனா மற்றும் சமகால நிலைமைகள் தொடர்பான விசேட கூட்டம் இடம் பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

கொரோனா எங்கள் வாழ்வில் ஒரு பகுதியாக இருக்கும் என்பதால் மக்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றவேண்டும். கைகழுவுதல், மாஸ்க் அணிதல், சமூக இடை வெளியை பின்பற்றுதல் என்பன கட்டாயமாக கடைப்பிடித்தேயாக வேண்டும். இல்லாவிட்டால் நாம் கொரோனா தொற்றை கட்டுப்படுத்த முடியாமல் அது முழுமையாக பரவும் நிலை ஏற்படும்.

இருவருக்கிடையில் சம் பாஷணை இடம்பெறும்போது இருவரும் மாஸ்க் போட்டு கலந்து ரையாடுவர்களாயின் நோய் தொற்று 1.5 வீதமாக காணப்படும் அத்துடன் சமூக இடைவெளியும் பின்பற்றப்படுமாக இருந்தால் இந்த தொற்று வீதம் மேலும் குறைவடை யும்.

எனினும் இலங்கையில் பல ருக்கு கொரோனாவின் தாக்கம் முக் கியமான பிரச்சினையாக தெரிய வில்லை. சாப்பாட்டுக் கடைகளை திறக்குமாறு நாம் கூறியிருந்த போதிலும் அவர்கள் சுகாதார நடைமுறைகளை சரியாக பின்பற் றாத நிலை காணப்படுகின்றது என தெரிவித்தார். (ம-3,299)

# வடக்கு சிகை அலங்கரிப்பு நிலையங்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் சிகை அலங் கரிப்பு நிலையங்களுக்குரிய அறி வுறுத்தல்களை மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் விடுத் துள்ளார்.

நீண்டநாட்களாக அமுலில் இரு ந்த ஊரடங்கு தளர்த்தப்பட உள்ள தால் பெருமளவானோர் சிகை அலங்கரிப்பு நிலையங்களை (சலூன்களை) அணுகவுள்ளனர். இது ஒரு ஆபத்தான நிலையாகும் என குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா தொற்று ஆபத்துக் களை தவிர்ப்பதற்காக பின்வரும் நடைமுறைகளை தங்களது சிகை அலங்கரிப்பு நிலையங்களில் அமுல்படுத்துமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

1. சலூன்களுக்குள் இருவருக் கிடையில் ஒரு மீற்றர் சமூக இடைவெளியைப் பேணவும்.
2. முடிதிருத்துநர்கள் கட்டாய மாக முகக்கவசம் அணிந் திருத்தல் வேண்டும்.
3. முடிதிருத்துநர்கள் ஒவ்வொரு வாடிக்கையாளருக்குரிய சேவையினை நிறைவு செய்த பின் கைகளை சரியான முறையில் ஓடும் நீரில் சவர்க் காரமிட்டு கழுவிய பின்பே அடுத்த வாடிக்கையாளருக் குரிய சேவையை வழங்க வேண்டும்.
4. மொத்தமாக பணியில் உள்ள முடிதிருத்துநர்களின் எண் ணிக்கைக்கு ஏற்ப வாடிக்கை யாளரை உள்ளே அனுமதிக் கவும்.
   உதாரணமாக முடி திருத்து நர்கள் இருவர் பணியில் இருந்தால் முடிவெட்டிக் கொண்டிருப்பவர்கள் இரு வரும் காத்திருப்பவர் இரு வரும் என நான்கு வாடிக்கை யாளர்களை மட்டுமே உள்ளே அனுமதிக்கவும். கடையின் அளவு சிறிதாயின் காத்திருக்கும் வாடிக்கை யாளரின் எண்ணிக்கையை மேலும் குறையுங்கள்.
5. ஒவ்வொரு வாடிக்கையாள ருக்கும் பாவிக்கும் உபகர ணங்கள் அனைத்தையும் ஸ்பிறிற் மூலம் அல்லது கொதிக்கும் நீரில் அமிழ்த்தி தொற்று நீக்கம் செய்யவும். தொற்று நீக்கம் செய்ய முடி யாத உபகரணங்களைப் பாவிப்பதை இயன்றவரை தவிர்த்துக் கொள்ளுங்கள்.
6. போர்வை, துவாய் மற்றும் பிளேட் போன்றவற்றை வழமை போல் ஒருவருக்கு ஒன்று எனப் பாவிக்கவும். பிளேட்டை ஒருவருக்குப் பாவித்த பின் அதனை உரிய முறையில் கழிவகற்றல் செய்யவும். துவாய்கள் மற் றும் போர்வைகளை தோய் த்து உலர்த்திய பின்பே பாவிக் கவும். (ம-3)

# கசிப்பு விற்பனைக்கு ஏற்பட்ட போட்டி மோதலின் முடிவு

## இருவர் படுகாயம்; 11 பேர் கைது

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட மயில்வாகனபுரம் பகுதி யில் கசிப்பு விற்பனையில் ஏற்பட்ட போட்டி காரணமாக இரு குழுக் களுக்கிடையில் ஏற்பட்ட மோத லில் இருவர் படுகாயமடைந்த நிலையில் தருமபுரம் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளி நொச்சி மாவட்ட வைத்தியசாலை க்கு மாற்றப்பட்டுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு சென்ற தருமபுரம் பொலிஸார் 11 பேரைக் கைது செய்ததுடன் அவர்களிட மிருந்து கத்தி, இரும்புக் கம்பி தாக்குதலுக்கு தயார் செய்யப்பட்ட உபகரணம் ஒன்றையும் கைப்பற்றி னர். (ம-3,113)

மார்ச் 17, 18, 19 ஆகிய திகதிகளில்

# தாக்கல் செய்யப்பட்டுள்ள வேட்பு மனுக்கள் செல்லுபடியற்றவை

## லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவிப்பு



(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப் பட்ட மார்ச் 17, 18 மற்றும் 19 ஆகிய தினங்கள் விடுமுறை தினங்கள் என்பதால் அந்த நாட்களில் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் செல்லுபடியற்றதாகும்.

காரணம் பொது விடுமுறை தினங்களில் சட்டரீதியான எவ்வித செயற்பாடுகளையும் முன்னெடுக்க முடியாது என்பதாகும் என்று ஐக் கிய மக்கள் சக்தியின் கண்டி மாவ ட்ட குழுக்களின் தலைவரும் மற்றும் முன்னாள் சபை முதல்வருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலுக் காக வேட்புமனுக்களை தாக்கல் செய்வதற்காக மார்ச் 17, 18 மற்றும் 19 ஆகிய மூன்று தினங்களும் விடுமுறை தினங்கள் என அறிவிக் கப்பட்டதால் இந்த நாட்களில் எவ் வித சட்டரீதியான செயற்பாட்டை யும் செய்ய முடியாது.

பொதுத் தேர்தலை நடத்துவ தற்கு தேர்தல் சட்டம் மற்றும் அரச விடுமுறை சட்டம் ஆகிய இரண் டுமே பொருந்தும். விடுமுறை சட்டத் தின் 364ஆவது அத்தியாயத்தின் 5 ஆம் உறுப்புரையில் உள்ளடக் கப்பட்டுள்ள இலத்தீன் வசனத் திற்கு சட்ட அகராதியில் குறிப்பிடப் பட்டுள்ள பொருளுக்கு அமைய எவ்வித சட்ட நடவடிக்கைகளை யும் விடுமுறை தினங்களில் முன் னெடுக்க முடியாது என்பது தெளி வாகக் கூறப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அதற்கமைய பொது விடுமுறை தினமொன்றில் வேட்புமனு தாக் கலை ஏற்றுக் கொள்வது செல்லு படியாகாது. இந்நிலைமையின் கீழ் மார்ச் 16ஆம் திகதி விடுமுறை தினமானதால் வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அதே போன்று விடுமுறை தினங் களான மார்ச் 17, 18 மற்றும் 19 ஆகிய தினங்களுக்கும் இது செல்லு படியாகும் என்றும் லக்ஷ்மன் கிரி யெல்ல தெரிவித்தார். (ம-3)

# அரசாங்கத்தினுடைய செயற்பாடுகளுக்கு கூட்டமைப்பின் ஒத்துழைப்பு ஏற்கக்கூடியது

## அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவிப்பு



(கொழும்பு)

அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு தமிழ் தேசிய கூட்டமைப்பு பிரதமரிடம் கோரிக்கைகளை சமர்ப்பிக்க வில்லை. நெருக்கடியான நிலை யில் கூட்டமைப்பு அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க முன்வந்தமை ஏற்றுக் கொள்ள கூடிய செயற்பாடு என சிறு, நடுத்தர வணிக மற்றும் நிறு வன மேம்பாடு, தொழில் வழங் கல் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெர முனவின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந் திப்பில் கலந்து கொண்டு கருத்து ரைக்கையில் அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

கொரோனா வைரஸை கட்டுப் படுத்த நாடு தழுவிய ரீதியில் ஊர டங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள் ளது. இதனால் பொருளாதார ரீதி யில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அர சாங்கம் 5000ம் ரூபாய் நிவா ரண தொகை வழங்கியுள் ளது.

இதனையும் எதி ர்த் தரப்பினர் தங்களின் அரசியல் தேவைக்கு பயன்படுத்திக் கொள் கின்றார்கள். அரசாங்கம் 20 ஆயி ரம் ரூபாய் வழங்க வேண்டும் என்று குறிப்பிடுகின்றார்கள்.

கடந்த அரசாங்கத்தில் இய ற்கை அனர்த்தினாலும் அரசாங் கத்தின் முறையற்ற செயற்பாடுகளி னாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணம் மற்றும் நட்ட ஈடு ஏதும் இதுவரை காலமும் வழங்கப்படவில்லை. இவ்வாறான பின்னணியில் உள்ளவர்கள் அர சாங்கத்தை தற்போது விமர்சிப்பது நகைப்புக்குரியது.

கொரோனா வைரஸை கட்டுப் படுத்தவும், சவால்களை வெற்றி கொள்ளவும் எதிர்தரப்பினர் எந் நிலையிலும் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை.

பிரதமர் தலைமையில் அலரி மாளிகையில் கடந்த 4ஆம் திகதி முன்னாள் பாராளுமன்ற உறுப் பினர்களது பங்கு பற்றலுடன் முக் கிய பேச்சுவார்த்தை இடம்பெற்றது.

இதன்போது தமிழ் தேசிய கூட் டமைப்பினர் பிரதமரிடம் கோரி க்கை உள்ளடங்கிய பத்திரங் களை சமர்ப்பித்தார்கள். இது தொட ர்பில் மாறுபட்ட கருத்துக்கள் குறிப் பிடப்படுகின்றன.

அரசியல் நோக்கங்களை அடிப் படையாக்க் கொண்டு கூட்டமைப் பினர் பிரதமரிடம் எவ்வித கோரிக் கைகளையும் விடுக்கவில்லை.

அரசாங்க தரப்பினருக்கும் கூட்டமைப்பினருக்கும் இடையில் அரசியல் ரீதியான நிலைப்பாடு வேறுபட்டதாகவே காணப்படுகின் றது.

நெருக்கடி நிலையில் அர சாங்கத்தின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க கூட்டமைப் பினர் முன்வந்தமை ஏற்றுக் கொள் ளக் கூடியது என்றார். (ம-3)

## 80 வீதமான கொரோனா நோயாளிகள்

# அறிகுறிகள் தென்படாமல் சமூகத்தில் இருக்கலாம்

### மருத்துவ ஆராய்ச்சி நிறுவன பணிப்பாளர் மருத்துவர் ஜயருவான் பண்டார எச்சரிக்கை

(கொழும்பு)

**கொரோனா நோய் அறிகுறிகள் தென்படாத 80 வீதமான நோயாளிகள் சமூகத்தில் ஆங்காங்கே இருக்கலாம் என இலங்கை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் மருத்துவர் ஜயருவான் பண்டார எச்சரித்துள்ளார்.**

**இதனால் இந்த நபர்கள் தொடர்பாக கூடிய கவனத்தை செலுத்த வேண்டும் எனவும் இல்லாவிட்டால் நோயாளிகள் மீண்டும் பெருகக்கூடும் எனவும் தெரிவித்துள்ளார்.**



கொரோனா நோயாளிகளில் 20 வீதமானோருக்கு எவ்வித நோய் அறிகுறிகளும் தென்படுவதில்லை. 60 வீதமான நோயாளர்களுக்கு குறைந்தளவிலேயே நோய் அறிகுறிகள் தென்படுகின்றன.

இதனால், இவர்கள் மிகப் பெரிய நோய் காவிகளாக மாறக் கூடும். இவர்கள் தொடர்பாகவே கூடுதலாக கவனமாக இருக்க வேண்டும்.

இல்லையென்றால், வேலைகளுக்கு சென்று வரும் நபர்கள் மூலம் வீடுகளுக்குள் கொரோனா வைரஸ் பரவக் கூடும் என்பதே தற்போதுள்ள பெரிய பிரச்சினை.

இந்த நிலைமையில், வைரஸ் தொற்றில் இருந்து தப்பிக்க கட்டாயம் சுகாதார ஆலோசனைகளை தொடர்ந்தும் பின்பற்ற வேண்டும்.

தொழில்களுக்கு வரும் நபர்கள் கட்டாயம் முகக் கவசங்களை அணிய வேண்டும் என்பதுடன் தனி நபர் இடைவெளியை பேண வேண்டும்எனவும்ஜயருவான்பண்டார அறிவுறுத்தியுள்ளார். (ம-3)

## பாராளுமன்றத்தை கலைத்தமைக்கு

### சஜித் கட்சி உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல்

(கொழும்பு)

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி (சமகி ஜன பலவேஹய) சார்பில் பாராளுமன்றத்தை கலைத்தமை மற்றும் பொதுத் தேர்தல் திகதி அறிவிப்பை விடுத்தமை ஆகிய வர்த்தமானி அறிவிப்புக்கு எதிராக உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் மார்ச் 2ஆம் திகதி பாராளுமன்றம் கலைக்கப்பட்டமை மற்றும் தேர்தல் திகதியை நிர்ணயித்து வர்த்தமானி வெளியிட்டமை ஆகியவை சவாலுக்கு உட்படுத்தும் வகையில் இந்த அடிப்படை உரிமை மனுக்கள் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இதேபோன்று மேலும் இரண்டு அடிப்படை உரிமை மனுக்கள் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதில் ஒரு மனுவை வரும் 11ஆம் திகதி திங்கட்கிழமை உயர் நீதிமன்ற சிறப்பு அமர்வில் விசாரணைக்கு அழைப்பதாக உயர் நீதிமன்ற பதிவாளாரால் மனுதாரர் சட்டத்தரணிக்கு மின்னஞ்சல் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை

### சுகாதார மேம்பாட்டுப் பணியகம்

(கொழும்பு)

பொதுத் தேர்தலை நடத்துவதாயின் பின்பற்றப்பட வேண்டிய சுகாதாரப் பாதுகாப்பு அணுகுமுறைகள் தொடர்பான முழுமையான அறிக்கை இன்னமும் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படவில்லை எனவும், முக்கிய அடிப்படை விடயங்களடங்கிய இடைக்கால அறிக்கை மாத்திரமே கையளிக்கப்பட்டுள்ளது எனவும் சுகாதார மேம்பாட்டுப் பணியகம் தெரிவித்திருக்கிறது.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தின் ஊடகப் பிரிவினால் வெளி யிடப்பட்டுள்ள அறிக்கையில் இவ் விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## கொரோனா பாதிப்பை போக்க திட்டங்கள் வகுக்க வேண்டும்

### வஜிர அபேவர்தன வலியுறுத்து

(கொழும்பு)

கொரோனா வைரஸ் நெருக்கடியினால் ஏற்படும் பாதிப்பைப் போக்க உலகளாவிய பொருளாதார முறைகளுக்கு ஏற்ப திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

காலியில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அவர்,

கொரோனா வைரஸ் தொற்று நோயின் தாக்கம் குறைய பல ஆண்டுகள் ஆகும் என்றும் தெரிவித்தார்.

கொரோனா வைரஸின் தாக்கம் 2023 வரை உலகை கடுமையாக பாதிக்கும். உலகின் பல நாடுகள் இதிலிருந்து 2025க்குள் மீள தொடங்கும் என்றும் அதற்குள் இலங்கையும் மீண்டு வருவதை ஆட்சியாளர்கள் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நெருக்கடி மோசமடைந்துவிட்டால் நாடு கடுமையான வறுமையை எதிர்கொள்ளும் அதே வேளை நாட்டின் கல்வி முறை தொடர்பாகவும் புதிய உலகளாவிய பொருளாதார முறைகளுக்கு ஏற்ற வகையில் சட்ட கட்டமைப்பையும் மாற்ற வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நேரத்தில் நாடு எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் என்றும், நெருக்கடி மோசமாகும் என்பதால் முடிவுகள் தாமதப்படுத்தப்படக்கூடாது என்றும் அவர் வலியுறுத்தினார். (ம-3)

### சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட வேளையில்

## புலிகள் இராணுவத்துக்கு எதிராக தாக்குதலை தொடுக்கவில்லை

### எதிர்க்கட்சிக்கு வாசுதேவ எடுத்துரைப்பு

(கொழும்பு)

சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட வேளையில் தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பு இராணுவத்திற்கு எதிராக தாக்குதலை தொடுக்கவில்லை. அச் செயற்பாடு ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தை சீர் செய்ய அரசாங்கத்திற்கு அது ஒரு சாதகமான சூழலாகக் காணப்பட்டது.

ஆனால் தற்போதைய எதிர்க்கட்சியினரது செயற்பாடு அவ்வாறு கிடையாது. நெருக்கடி நிலையிலும் அரசியல் இலாபம் தேடிக்கொள்கின்றார்கள் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்தவும் பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்கவும் அரசாங்கம் முன்னெடுக்கும் திட்டங்களை எதிர்தரப்பினர் தொடர்ந்து கேள்விக்குட்படுத்தியதனூடாக அரசியல் இலாபம் தேடிக் கொள்கின்றார்கள்.

சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பு இராணுவத்திற்கு எதிராக தாக்குதலை முன்னெடுக்கவில்லை. அப்போதைய நெருக்கடி நிலையினை சமாளிக்க அவரவர் தரப்பில் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகளை அவர்கள் முன்னெடுத்தார்கள். அச்சந்தர்ப்பத்தில் அது அரசாங்கத்துக்கு சாதகமாக அமைந்தது.

நெருக்கடி நிலையில். விடுதலைப் புலிகள் அமைப்பு செயற்பட்டவாறு தற்போதைய எதிர்க்கட்சியினர் செயற்படவில்லை. இவர்களது செயற்பாடுகள் சுயநல தேவைகளை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளன.

பொதுத் தேர்தலுக்கான சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனு தாக்கலில் இருந்து பாராளுமன்றம் கலைக்கப்பட்ட வரை அரசாங்கம் அரசியலமைப்புக்கு முரணாக செயற்படுவதாக எதிர்தரப்பினர் குற்றஞ்சாட்டுகின்றார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)

பிழையைச் சரிப்படுத்திக் கொள்ள முயற்சி செய்வதில் அவமானம் இல்லை.
– ராஜாஜி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## உதவித் தொகை கிடைப்பதை யாரும் தடுத்து விடாதீர்கள்

கொரோனாத் தொற்றுக் காரணமாக ஏற்பட்டுள்ள தொழில் இழப்பு மற்றும் சமுர்த்திப் பயனாளிகள், முதியவர்கள் என்போருக்கு அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற நிதி உதவிகள் குறிப்பிட்ட குடும்பங்களுக்கு கிடைக்கவில்லை என்ற குறைபாடுகள் பரவலாகப் பேசப்படுகின்றது.

அதிலும் தொழில் இழப்பு என்ற வகுதியினருக்கே குறித்த நிதி உதவி கிடைக்கவில்லை என்றும் கூறப்படுகிறது.

கொரோனாத் தொற்றுக் காரணமாக தொழில் இழப்பு ஏற்பட்டுள்ளது என்பதைத் தீர்மானிப்பவர்களாக குறித்த இடத்து கிராம உத்தியோகத்தர் மற்றும் அந்தப் பிரதேச செயலாளர் ஆகியோர் உள்ளனர்.

இங்கு கொரோனாத் தொற்றுக் காரணமாக தொழில் இழப்பு பலருக்கும் ஏற்பட்டுள்ளதென்பதை எவரும் நிராகரிக்க முடியாது.

குறிப்பாக விவசாயிகளை எடுத்துக் கொண்டால், உரிய காலத்தில் அறுவடை செய்ய முடியாத சூழ்நிலை, அறுவடை செய்த பொருட்களைச் சந்தைப்படுத்த முடியாமையால் ஏற்பட்ட நட்டம் என்பன விவசாயிகளுக்குத் தொழில் இழப்பாகவே உள்ளது.

இதேபோன்றுதான் கடற்றொழிலாளர்களின் நிலையும் உள்ளது.

இவர்கள் தவிர, சிறு வர்த்தகர்கள், சந்தை வியாபாரிகள் எனப் பல்வேறு தொழில் முயற்சிகளில் ஈடுபடுகின்றவர்கள் தங்களின் நாளாந்த உழைப்பை இழந்துள்ளனர்.

இந்நிலையில் இவர்களின் தொழில் இழப்பை இழப்பாகக் கருதாத பட்சத்தில், அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற நிதி உதவி இவர்களுக்குக் கிடைக்காமல் போகும்.

அதிலும் முதல் கட்ட நிதி உதவியின்போது உள்ளீர்க்கப்படாதவர்களுக்கு இரண்டாம் கட்டத்தில் நிதி உதவி கிடைப்பதென்பது கடினமான காரியமே.

எனவே இது விடயத்தில் அரச அதிபர்கள், பிரதேச செயலாளர்கள் மிகச் செம்மையான ஒழுங்குபடுத்தலுடன் தொழில் இழப்பாளர்களை இனங்கண்டு அவர்களுக்கு நிதி உதவி கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முதலாம் கட்ட நிதி உதவி கிடைக்கத் தவறியவர்கள் இருக்கும் பட்சத்தில் அவர்களுக்கு நிதி உதவி வழங்க வேண்டியதன் அவசியத்தை அரச தலைமைக்கு எடுத்துரைப்பதை வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் தமிழ் அரசியல் தரப்புகள் செய்வதும் அவசியமாகும்.

கொரோனா ஆபத்து எப்போது முடிவுக்கு வரும் என்பது தெரியாத நிலையில், அரச உத்தியோகத்தர்கள் எழுந்தமானமாக எடுக்கின்ற தீர்மானங்கள் தொழில் இழப்பைச் சந்தித்தவர்களுக்கு அரச நிதி உதவியையும் ஏனைய நிவாரணக் கொடுப்பனவுகளையும் இல்லாமல் செய்து விடும் என்பதால்,

முடிந்தளவில் பொதுமக்கள் பாதிக்கப்படாத வகையில் தீர்மானங்களை எடுப்பது மிகவும் முக்கியமானது.

# உலகளவில் கொரோனா பாதிப்பு 37 இலட்சத்தைத் தாண்டியது

(ஜெனீவா)

உலகளாவிய ரீதியில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 37 இலட்சத்து 27ஆயிரத்தை கடந்துள்ளது. இந்நிலையில் சர்வதேச ரீதியாக நேற்று முன்தினம் வரையான காலப்பகுதியில் கொரோனா வைரஸ் பரவல் ஏற்படுத்தியுள்ள பாதிப்புகள் தொடர்பில் தெரிய வருவதாவது.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக இதுவரையான காலப்பகுதியில் 3.7 லட்சத்து 27 ஆயிரத்து 865 பேர் உலகளாவிய ரீதியாக பாதிக்கப் பட்டுள்ளனர். மேலும் சர்வதேச ரீதியாக மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை 2 இலட்சத்து 58 ஆயிரத்து 340ஆக அதிகரித்துள்ளது.

மேலும் குணமடைந்து வெளியேறியோரின் எண்ணிக்கையும் கணிசமாக அதிகரித்துவரும் நிலையில், இதுவரையான காலப்பகுதியில், 12 இலட்சத்து 42 ஆயிரத்து 393 பேர் குணமடைந்தனர் என உத்தியோகபூர்வ தகவல்கள் தெரிவித்தன.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக அதிகமாக பாதிக்கப்பட்ட நாடுகளில் அமெரிக்கா முதலிடத்தில் காணப்படுகிறது.

அமெரிக்காவுக்கு அடுத்த படியாக அதிக தொற்றாளர்களை கொண்ட நாடாக, ஸ்பெயின் காணப்படும் அதேவேளை அங்கு மொத்தமாக 2 இலட்சத்து 50 ஆயிரத்து 561 பேர் பாதிக்கப்பட்டனர்.

அதேவேளை அங்கு நேற்று முன்தினம் ஒரே நாளில் மட்டும் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2,260 ஆக பதிவாகியுள்ளது. அத்துடன் அங்கு இதுவரையான காலப்பகுதியில் இறந்தவர்களின் எண்ணிக்கை 25,613 ஆக பதிவாகியுள்ள அதேவேளை நேற்று முன்தினம் ஒரே நாளில் 185 மரணங்கள் பதிவாகியுள்ளன.

மேலும் ஸ்பெயினில் இதுவரையான காலப்பகுதியில், ஒரு இலட்சத்து 54 ஆயிரத்து 718 பேர் குணமடைந்துள்ளதாக உத்தியோகபூர்வ செய்திகள் தெரிவித்துள்ளன.

இதேவேளை மற்றொரு ஐரோப்பிய நாடான ஜேர்மனியில் குணமடைந்து வெளியேறுவோரின் எண்ணிக்கை ஆரம்பம் முதலே அதிகமாக காணப்படுகிறது. அதனடிப்படையில், இதுவரை அங்கு ஒரு இலட்சத்து 67 ஆயிரத்து ஏழு பேர் தொற்றுக்குள்ளாகியுள்ள நிலையில், ஒரு லட்சத்து 35 ஆயிரத்து 100 பேர் குணமடைந்தனர்.

மேலும் அங்கு நேற்று முன்தினம் ஒரே நாளில் 855 பேர் தொற்றுக்கு இலக்காகியுள்ள நிலையில், இதுவரை 6,993 பேர் மரணமடைந்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து பிரான்சிலும் கணிசமான பாதிப்புகள் கடந்த சில வாரங்களாக ஏற்படுத்தப்பட்டு வரும் நிலையில் இதுவரையான காலப்பகுதியில் அங்கு ஒரு இலட்சத்து 70 ஆயிரத்து 551 பேர் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர்.

அதேவேளை நேற்று முன்தினம் மாத்திரம் பிரான்சில் 1,089 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதுவரையான காலப்பகுதியில் பிரான்சில் 25ஆயிரத்து 531 பேர் உயிரிழந்துள்ள அதேவேளை நேற்று முன்தினம் 330 பேர் மரணித்துள்ளனர்.

துருக்கியில் இதுவரை தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 29 ஆயிரத்து 491 ஆக பதிவாகியுள்ள அதேவேளை 1,832 பேர் நேற்று முன்தினம் ஒரே நாளில் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர்.

அத்துடன் நேற்று முன்தினம் கொரோனா வைரஸால் உயிரிழந்த 59 பேருடன் சேர்த்து அங்கு உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3,520 அதிகரித்துள்ளது.

ஆசிய நாடுகளில் இதுவரை 587,192 தொற்றுக்க உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், நேற்று முன்தினம் 14,353 பேர் தொற்றுக்குளாகியுள்ளனர்.

இதுவரையான காலப்பகுதியில் துருக்கியில் 129, 491 பேரும் ஈரானில் 99, 970 பேரும் இந்தியாவில் 49,400 பேரும் பாகிஸ்தானில் 22,049 பேரும் பாதிக்கப்பட்டுள்ள அதேவேளை நேற்றைய தினம் ஆசிய நாடுகளில் இந்தியாவில் அதிகபட்சமாக 2,963 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன், நேற்று முன்தினம் ஒரே நாளில் அதிகபட்சமாக அங்கு 127 பேரின் மரணங்களும் பதிவாகியுள்ளது.

அதேவேளை மோசமான பாதிப்பினை எதிர்கொண்டிருந்த இத்தாலியிலும் படிப்படியாக ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பாடசாலை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான மாகாணமட்ட தயார்படுத்தல்கள் குறித்து ஆராய்வு

(மட்டக்களப்பு)

பாடசாலை நடவடிக்கைகளை ஆரம்பிப்பது தொடர்பாக மாகாண மட்ட தயார்படுத்தல்கள் சம்பந்தமான கலந்துரையாடல் கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் கல்வி இராஜாங்க அமைச்சின் செயலாளர் ரஞ்சித் சந்திரசேகர, கல்வியமைச்சின் செயலாளர், கிழக்கு மாகாண கல்வித் திணைக்களங்களது செயலாளர்கள் மற்றும் பல அரச அதிகாரிகள் பங்கேற்றிருந்தனர்.

தேசிய மட்டத்தில் மீண்டும் பாடசாலைகளை ஆரம்பிப்பது தொடர்பாக தயாரிக்கப்படும் திட்டக்கோவையில் மாகாண மட்டங்களில் இருக்கின்ற பாடசாலைகளின் நிலை குறித்து தரவுகள் சேகரிக்கும் அடிப்படையில் குறித்த சந்திப்பு நேற்று புதன் கிழமை இடம்பெற்றது.

செய்தியாளர்கள் குறித்த கூட்டத்திற்குள் அனுமதிக்கப்படாவிடினும் கூட்டத்தின் இறுதியில் கல்வி இராஜாங்க அமைச்சின் செயலாளரால் செய்தியாளர் சந்திப்பொன்று நடத்தப்பட்டது.

சமூக ஊடகங்களில் பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பாக மாறுபட்ட கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருவதாகவும் அவையனைத்தும் போலியானவை எனவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் சுகாதார நிலைமைகள் குறித்து நன்கு ஆராய்ந்த பின்னரே பாடசாலைகளை மீள ஆரம்பித்தல் தொடர்பாக உறுதிப்படுத்த முடியும் என்பதால் பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது குறித்து இன்னமும் தீர்க்கமான முடிவுகள் எட்டப்படவில்லையென அவர் தெரிவித்தார்.

உயர்தரப் பரீட்சைகள் நடத்துவது தொடர்பாக இதுவரை எந்தவொரு முடிவும் எடுக்கப்படவில்லை. அதேவேளை, எந்தவொரு மாணவனுக்கும் பாதிப்புகள் ஏற்படாதவாறு உயர்தரப் பரீட்சைகளை நடத்துவது குறித்து ஆராயப்படும் என அவர் தெரிவித்தார்.

சில பாடசாலைகள் சமூக வலைத்தளங்கள் ஊடாக கற்பித்தல் செயன்முறைகளை முன்னெடுக்கின்றன. அவையனைத்தும் பாடசாலையின் பாடத் திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கான முயற்சி அல்ல எனவும் அவை அனைத்தும் மேலதிக செயற்பாடுகள் என அவர் கூறியுள்ளார்.

மேலும், மாணவர்களுக்கு வழங்கப்பட்ட விடுமுறையானது விஸ்தரிக்கப்பட்டுள்ளதால் எவரும் பீதியடைய வேண்டாம் எனவும் பாடசாலை பாடத்திட்டங்கள் அனைத்தும் பாடசாலை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னரே உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

ஒரு பெண்மணியின் இதயம் கருணைக் கோவிலாக மாறும் போது அதற்கு இணையான அன்பு இந்த உலகில் இல்லை. - லூதர் கிங்

## சத்திய தரிசனம்

### பெற்றோர் நம் தெய்வம்



❖ வாழ்க்கை என்னும் நாணயத்திற்கு இன்பம், துன்பம் என இருபக்கங்கள் இருக்கின்றன.

❖ உலகில் உள்ள அனைத்தும் மாறுதலுக்கு உட்பட்டது. மாற்றம் என்ற ஒன்று மட்டுமே என்றைக்கும் மாறாதது.

❖ மனித உடலை நமக்களித்த பெற்றோரை, கடவுளாக மதித்துப் போற்றுங்கள்.

❖ குழந்தைகள் பஜனை, தியானம் போன்றவற்றில் ஈடுபட வழிகாட்டுங்கள்.

❖ "நான்" என்ற ஆணவம் கொண்டவனை துன்பம் தொடரும்.

❖ சமூகப்பணியில் ஈடுபடுபவர்களிடம் தற்பெருமை கூடாது. மன அடக்கத்துடன் இறைவன் அளித்த வாய்ப்பாக எண்ணி தொண்டாற்றுங்கள்.

❖ மற்றவர்களின் வற்புறுத்தலுக்காக தொண்டில் ஈடுபடாதீர்கள். அன்புக்காக தொண்டாற்றுவதே சிறந்தது.

❖ வாழ்க்கை ஒரே திசையில் செல்லும் நீரோட்டம் என்பதால் பயனுள்ள வகையில் நேரத்தை செலவழிப்பதே அறிவுடைமை.

# யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 45 பேருக்குக் கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள்

## எவருக்கும் தொற்றில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை 47 பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளன.

எனினும், அவர்களனைவருக்கும் கொரோனாத் தொற்றில்லையென யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

அந்தவகையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை விடுதிகளில் அனுமதிக்கப்பட்ட மூவர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற வந்த நால்வர், கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒருவர், காங்கேசன்துறை கடற்படை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒருவர், வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட எட்டுப் பேர், முழங்காவில் தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கியிருந்த 30 பேர் ஆகியோரே இவ்வாறு பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-18)

# முகக்கவசங்களுடன் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லக்கூடாது

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் நிபந்தனை

(யாழ்ப்பாணம்)

நாட்டு நிலைமை இன்னும் வழமைக்குத் திரும்பவில்லை. உலகளாவிய ரீதியில் உயிரிழப்புக்கள் அதிகரித்த வண்ணமுள்ளன. இலங்கையிலும் கொரோனா நோய்த் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டவண்ணமுள்ளனர். இலங்கையில் ஒன்பதாவது மரணம் நிகழ்ந்துள்ளது. இன்னும் பலர் பரிசோதனை செய்யப்படாத நிலையில் மறைந்துள்ளதாக மருத்துவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இதனை முழுவதுமாக ஆராய்ந்து உணர்த்தும் கடமை முழுக்க முழுக்க மருத்துவத் துறைக்கே உரியது.

இந்நிலையில் பாடசாலைகளை அரசாங்கம் திறப்பது தொடர்பாக ஊடகங்களில் பல்வேறு செய்திகள் வெளியாகின்றன.

இதைவிட பலர் பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பாக கருத்துக்களைப் பகிர்ந்தும் வருகின்றனர்.

உலகம் முழுவதும் பல கோடிக்கணக்கான மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. அதே போன்று இலங்கையிலும் சில மாதங்கள் கல்வி நடவடிக்கைகள் தடைப்பட்டுள்ளன. மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லாமல் மாற்றீடாகச் செய்யப்படும் எந்த முயற்சிகளும் முழுமையாகப் பயனளிக்காது என்பது கல்விப்புலம் சார்ந்த பலரது யதார்த்தமான கருத்து.

மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் மீளவும் ஆரம்பிக்கப்படவேண்டும் என்பதில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் மிகுந்த எதிர்பார்ப்புடன் உள்ளது. அதற்காக பாடசாலைகளை ஆரம்பிக்கக்கூடாது என தொழிற்சங்க ரீதியாக நாம் எந்தவிதமான எச்சரிக்கைகளையும் அரசாங்கத்திற்கு விடுக்கத் தேவையில்லை. காரணம் அனைத்துலகிலும் நடப்பதனை அரசாங்கம் அறிந்திருக்க வேண்டும். சுகாதாரத்துறையினரின் அறிவித்தல்களைப் பின்பற்ற வேண்டும்.

அவ்வாறு பாடசாலைகளை மீளத்திறந்து பிள்ளைகள் வரவழைக்கப்படுவார்களாக இருந்தால் அவர்களின் முழுப்பாதுகாப்பிற்கும் அரசாங்கமே பொறுப்பாக வேண்டும்.

மாறாக அதிபர்களையோ, ஆசிரியர்களையோ பாதுகாப்பாளர்களாக நியமிக்கமுடியாது. அதற்கான காரணங்கள் பல உள்ளன.

பாடசாலைகளை மீளத்தொடக்குவதானால்...

01.நாட்டில் எந்தப் பாகத்திலும் கொரோனா தொற்றாளர்கள் இருக்கக்கூடாது.

02.முகக்கவசங்களுடன்மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்லக்கூடாது.

03.ஆசிரியர்கள் முகக்கவசங்கள் இன்றி கற்பிக்கும் சூழல் அமையவேண்டும்.

04.மாணவர்கள் முகக்கவசம் பாவிப்பதாக இருந்தால் அனைத்து மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் முகக்கவசங்களை அரசாங்கமே வழங்க வேண்டும். (வேறுபடுத்தல்களைத் தவிர்க்க)

05.மாணவர்களின் முழு வரவு நிலையையும் உறுதிப்படுத்த வேண்டும்.

06.அதிபர்கள், ஆசிரியர்கள் சுயமாகச் செயற்படும் நிலை உருவாகவேண்டும். (கொரோனா தொடர்பான நாளாந்த அறிக்கை தயாரித்தல் பணி நடைபெறக் கூடாது)

07.நாட்டில் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் நடைபெற்று முடிவடைந்த பாட அலகுகளுக்கே பரீட்சைகள் நடைபெற வேண்டும்.

இதனை விடுத்து அமைச்சர் திறப்பேன் என்பதும் சுகாதாரப் பணிப்பாளர் அதற்கான வாய்ப்பில்லை என்கின்ற செய்திகள் மாணவர்கள் மத்தியில் மட்டுமன்றி பெற்றோர் மத்தியிலும் ஏன் அதிபர்கள், ஆசிரியர்கள் மத்தியிலும் குழப்பத்தை ஏற்படுத்துகின்றது.

ஆகையால் பாடசாலைகளைத் திறப்பது தொடர்பாக நாம் கூறியுள்ள விடயங்களில் கரிசனை செலுத்தி சுகாதாரத்துறையினரின் உறுதிப்படுத்தலைப் பெற்றுக்கொண்டு அறிவித்தல்களை வெளியிடுமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது. (இ-7)

## பாதுகாப்பற்ற முறையில் பொருட்கள் வாங்க குவிந்த மக்கள்



(குப்பிழான்)

கல்வியங்காடு பொதுச் சந்தை கொரோனா நோய்த் தாக்கம் காரணமாகத் தற்போது மேற்படி சந்தைக் கட்டடத் தொகுதிக்கு அண்மையில் வீதியோரமாகத் தற்காலிகமாக இயங்கி வருகிறது.

இந்நிலையில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் காலங்களில் எவ்வித கொரோனா நோய்த் தாக்க முற்பாதுகாப்புமின்றி மக்கள் மரக்கறிகள் மீன், பலசரக்குப் பொருட்களைக் கொள்வனவு செய்வதாக சமூக ஆர்வலர்களால் விசனம் வெளியிடப்பட்டது.

இது தொடர்பில் நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர், பொலிஸார் மற்றும் சுகாதார அதிகாரிகள் பாராமுகமாகவிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது. (ஐ-18)

# இல்லங்களை ஒப்படைக்கவில்லை முன்னாள் எம்.பிக்கள் மீது வழக்கு

## ஹக்கீம், செல்வம், பைசர் உள்ளிட்ட 22 பேர் உள்ளடக்கம்







(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தில் அமைச்சர்களாகவும் பிரதி மற்றும் இராஜாங்க அமைச்சர்களாகவும் நாடாளுமன்றின் முக்கிய பதவிகளை வகித்த சிலருக்கு எதிராகவும் வழக்குத் தொடரப்படவுள்ளது.

முன்னாள் அமைச்சர் ரவூப் ஹக்கிம், ஹிஸ்புல்லா உள்ளிட்ட நல்லாட்சியில் உயர் பதவி வகித்த சிலருக்கு எதிராக இவ்வாறு வழக்குத் தொடரப்படவுள்ளது.

அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் உள்ளிட்ட பதவிகளை வகித்த 22 பேர் இதுவரையில் தங்களது அதிகாரபூர்வ இல்லங்களை ஒப்படைக்கவில்லை எனக் குற்றம் சுமத்தப்பட்டது.

ரவூப் ஹக்கிம், ரவீந்திர சமரவீர, அப்துல் ஹாலீம், சாந்தனி பண்டார, லக்ஷ்மன் செனவிரட்ன, அமீர் அலி, எட்வட் குணசேகர, நளின் பண்டார, ஜே.சீ.அலவத்துவல, அசோக அபேசிங்க, சம்பிக்கா பிரேமதாஸ, வடிவேல் சுரேஷ், எச்.எம்.எம்.ஹாரீஸ், பைசல் ஹாசீம், துலிப் விஜேசேகர, துனேஷ் கன்கந்த, பைசர் முஸ்தபா, ரீ.பி. ஏக்நாயக்க, சந்திம வீரக்கொடி, எம்.எல்.எம்.ஏ.ஹிஸ்புல்லா, ஜகத் புஸ்பகுமார மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரே இவ்வாறு தங்களது அதிகாரபூர்வ இல்லங்களை இதுவரையில் ஒப்படைக்கத் தவறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டதன் பின்னர் எதிர்வரும் 11 ஆம் திகதியின் பின்னர் இவ்வாறு வழக்குத் தொடரப்படக்கூடிய சாத்தியங்கள் உண்டு எனத் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# கொரோனா ஒழிப்புக்கு பல்வேறு தரப்பினர் உதவி

(கொழும்பு)

சுவிட்சர்லாந்தின் இலங்கைக்கான தூதுவர் ஹேன்ஸ் பீற்றர் மொக் (Hans Peter Mock) பணிப்புரையின் பேரில் வாரியோ சிஷ்டம் (VARIO SYSTEMS) நிறுவனம் கொரோனா ஒழிப்பு நடவடிக்கைக்காக 12 மில்லியன் ரூபாய் பெறுமதியான மருத்துவ உபகரணங்களை அன்பளிப்பு செய்தது.

வாரியோ சிஷ்டம் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் டீ.சதீஷ்வரம் உள்ளிட்ட பணிக்குழாமினர் ஜனாதிபதி அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கே.பீ.எகொடவெலே மற்றும் ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் சுகீஷ்வர பண்டார ஆகியோரிடம் கடந்த 4 ஆம் திகதி ஜனாதிபதி அலுவலகத்தில் உபகரணங்களைக் கையளித்தனர்.

இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் எம்.ஆர்.டபிள்யூ. சொய்ஸாவும் இந்நிகழ்வில் கலந்துகொண்டார்.

இதேவேளை இலங்கை மொபிடெல் நிறுவனம் அன்பளிப்பு செய்த கையடக்க தொலைபேசிகள் ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் சுகீஷ்வர பண்டாரவால் நேற்று முன்தினம் முற்பகல் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் சந்தன கஜநாயக்கவிடம் கையளிக்கப்பட்டன.

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தொண்டை, காது, மூக்கு சிகிச்சைப் பிரிவின் மருத்துவர் மகேஷின் கோரிக்கையின் பேரில் இந்த அன்பளிப்பு மேற்கொள்ளப்பட்டது. (இ-7)

# முடக்கப்பட்ட சூழ்நிலையில் மாணவர்களின் கல்விக்கு விசேட திட்டம் அவசியம்

## முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக நாடு முடக்கப்பட்டுள் ளமையால் மாணவர்களின் கல்வியும் பெரிதும் பாதிக்கப்பட்டு ள்ளது. எனவே விசேட திட்டங் களை வகுத்து மாணவர்களுக்கு கல்வி புகட்ட அரசாங்கம் நடவ டிக்கை எடுக்க வேண்டும் என்று முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கோரிக்கை விடுத் தார்.

கொரோனாத் தாக்கத்திற்கு மத்தியில் மாணவர்களின் கல்வி பாதிப்புத் தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்ட அவர் இந்த விடயத்தை வலியுறுத்தினார்.

அந்த அறிக்கையில், எமது நாட்டில் கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக கல்வி நட வடிக்கைகள் முற்றாகப் பாதிக் கப்பட்டுள்ளன. பாடசாலைகளை மீளவும் எப்போது ஆரம்பிக்க முடியும் என்ற விடயத்தில் முடிவு எடுக்க முடியாத நிலைமை இன் னமும் காணப்படுகிறது.

பாடசாலைகளை மீளவும் ஆரம்பிக்கக் கூடிய நிலைமை உடனடியாக ஏற்படப்போவதி ல்லை. இதனால் இவ்வாறான முடக்க நிலையில் எவ்வாறு மாணவர்களுக்கு கல்வியைப் போதிப்பது என்பது தொடர்பில் சிந்தித்து விசேட திட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டும். தற்போது நகரப்புற முன்னணிப் பாடசாலைகள் இணைய வழி மூலம் தமது மாணவர்களுக்கு சில பாடங்களை கற்பிக்கும் செயன்முறையை ஆரம்பித்துள் ளன.

இதேபோன்றே தொலைக் காட்சி வாயிலாகவும் பாடங்க ளைக் கற்பிக்கும் செயற்றிட்டம் கல்வியமைச்சால் ஆரம்பிக்கப்பட் டுள்ளது. ஆனால் இத்தகைய செயற்பாடுகள் சகல மாணவர் களுக்கும் நன்மையளிக்கும் வகையில் அமையவில்லை.

கிராமப்புறங்களைச் சேர்ந்த மாணவர்களிடம் கணனி வசதி இல்லை. இத்தகையவர்கள் இணை யத்தளம் மூலமான கல்வியைத் தொடரமுடியாது. இதேபோன்றே கிராமப்புறங்களில் சகல வீடுகளி லும் தொலைக்காட்சிகள் இல்லை. இவ்வாறான நிலையில் வறு மைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்கள் முடக்க நிலையில் பாடத்திட்டங்களைப் பயில முடி யாத நிலைமை உள்ளது.

எனவே இவ்வாறு கிராமப் புறங்களில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்களும் தமது பாடத்திட்டங்களைத் தொட ரும் வகையில் விசேட நடவடிக் கையை கல்வியமைச்சு மேற் கொள்ள வேண்டும். பாடசாலை களின் ஆசிரியர்கள் மாணவர்க ளுக்கு பாடத்திட்டங்கள் மற்றும் வினாவிடைகள் என்பவற்றை அச்சடித்து மாணவர்களது வீடுக ளுக்கு வழங்கும் வகையிலான செயற்பாடு இடம்பெற வேண்டும். இதற்கு கல்வியமைச்சு உரிய நிதிகளை குறித்த பாடசாலைக ளுக்கு வழங்க வேண்டியது இன் றியமையாததாகும்.

கிராமப்புறங்கள் தோறும் உள்ள மாணவர்களுக்கு கல் வியை வீட்டிலிருந்து பயிலக் கூடிய வகையில் செயற்றிட்டங் கள் மேற்கொள்ளப்பட வேண் டும். இந்த விடயத்தில் கல்விய மைச்சின் ஒத்துழைப்புடன் அதி பர்களும் ஆசிரியர்களும் பரந்த மனப்பாங்குடன் செயற்பட வேண் டியது அவசியத் தேவையாகவுள் ளது என அவர் விடுத்துள்ள அறி க்கையில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (இ-7)

## கொரோனாத் தொற்றாளர்களுடன் பணியாளர்கள் தொடர்பு

# ஆயுர்வேத வைத்தியசாலை மூடல்

(பெலியத்த)

பெலியத்த ஆயுர்வேத வைத் தியசாலையின் பணிப்பாளர்கள் இருவர் கொரோனா தொற்றாளர் கள் இருவருடன் தொடர்பிலிருந் துள்ளமை தெரியவந்துள்ளதால் இந்த வைத்தியசாலையை தற் காலிகமாக மூட நடவடிக்கை எடுத்ததாக பெரியத்த சுகாதார வைத்திய அதிகாரி அநுர ஜய சேகர தெரிவித்தார்.

தங்காலை-வகேகொட பிர தேசத்தைச் சேர்ந்த ஒருவரே கொரோனா தொற்றுக்குள்ளாகியு ள்ளமை நேற்று முன்தினம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தத் தொற்றாளரின் வீட் டில் இடம்பெற்ற விருந்துபசார நிகழ்வில் பெலியத்த வைத் தியசாலையில் கடமையாற்றும் சாரதியும் அவரது மனைவியும் கலந்துகொண்டமை காரணமா கவே வைத்தியசாலையை தற் காலிகமான மூட நடவடிக்கை எடுத்ததாகவும் அவர் தெரிவித் தார். (ஐ)

# கொரோனாத் தாக்கத்தைக்காரணம் காட்டி அபிவிருத்தியைத் தடை செய்ய முடியாது

## நகரசபை உறுப்பினர் கஜிதன் தெரிவிப்பு

(சாவகச்சேரி)

கொரோனா வைரஸ் தாக்க த்தை காரணம் காட்டி அபிவி ருத்தியைத் தடை செய்ய முடி யாது என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் க.கஜிதன் தெரிவித் தார்.

அண்மையில் சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற மாதா ந்த அமர்வின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கை யில்,

கொரோனா அச்சம் கார ணமாக இரண்டு மாத காலம் அபிவிருத்தி தடைப்பட்டுள்ளது. தடைப்பட்ட அபிவிருத்தித் திட் டங்களைத் தொடர்ந்து முன்னெ டுத்துச் செல்ல வேண்டும்.

அபிவிருத்தியை தடை செய்து தான் மக்கள் நலன் பற்றிச் சிந்திக்க வேண்டும் என்றல்ல. மக்கள் நலனையும் அபிவிருத் தியையும் சமாந்தரமாகச் செய்ய முடியும்.

அத்துடன் இடர் காலத்தில் தமது உயிரைத் துச்சமாக நினை த்து கடமையாற்றுகின்ற சுகா தாரத் தொழிலாளர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், சுகா தாரப் பணி மேற்பார்வையாள ர்கள் அர்ப்பணிப்புடன் செயற்ப ட்டு வருகின்றனர். அவர்களுக்கு நன்றி கூற நகரசபை கடமைப் பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-30)

# இராசிபலன்

07.05.2020
சித்திரை 24, வியாழக்கிழமை
பூரணை பிற்பகல் 5.13 மணிவரை
சுவாதி முற்பகல் 11.45 மணிவரை
சுபநேரம் 7.25-8.55 மணிவரை
இராகுகாலம் 1.25-2.55 மணிவரை
சந்திராஷ்டமம்:- ரேவதி, அச்சுவினி
சித்திரா பௌர்ணமி விரதம்



மேஷம்

குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.



ரிஷபம்

கடன்சுமை குறைய நடவடிக்கை எடுப் பீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்ப வங்கள் இடம்பெறலாம், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும்.



மிதுனம்

பிள்ளைகளின் கல்வி நலனில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, குல தெய்வ வழிபாட்டில் ஆர்வம் கூடும், புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் உருவா கும்.



கடகம்

விருப்பங்கள் நிறைவேற விரதம் வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டிய நாள், பெற்றோர் மீது பிரியம் கூடும், வரு மானம் பெருக வழிசமைத்துக் கொள் வீர்கள், போசன சுகமுண்டு.



சிம்மம்

எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், பகை விலகும், சொத்துக்கள் சம்பந் தப் பட்ட வகையில் ஆதாயம் கிடைக்கும், உற வினர்களின் தொடர்புகள் அனுகூலம் தரும்.



கன்னி

எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள், குலதெய்வ வழிபாட்டுச் சிந் தனை மேலோங்கும் நாள், வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், போசன சுகமுண்டு.



துலாம்

குடும்ப பெரியவர்களின் ஆலோசனை யைக் கேட்டு நடப்பது நல்லது, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், செய் தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும்.



விருச்சிகம்

எடுத்த காரியங்களில் வெற்றிபெற விநாயகரை வழிபட வேண்டிய நாள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர்களின் சந்திப்புண்டு.



தனுசு

சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ் வீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம் பவங்கள் இடம்பெறலாம், போசன சுக முண்டு, காரிய அனுகூலமுண்டு, கௌர வமான நாள்.



மகரம்

பெண்களால் பெருமைகள் வந்து சேர லாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், கனவுகள் நனவாக கணபதியை வழிபட வேண்டிய நாள், போசன சுக முண்டு.



கும்பம்

இறைவழிபாட்டுச் சிந்தனை மேலோ ங்கும் நாள், சுணங்கிய காரியங்களில் முன் னேற்றம் காண்பீர்கள், ரோக பயமுண்டு, உறவினர் வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும்.



மீனம்

கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், தேக நலனில் அதிக அக் கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், குடும்பத்தினரிடம் கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம்.

சோம்பேறிகளுக்கு எல்லா நாட்களும் விடுமுறையே

# கொரோனாத் தொற்று நோயாளிகள் பற்றி பொய்யான விபரங்கள் வெளியிடவில்லை

## வைத்தியர் அனில் ஜாசிங்க மறுப்பு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் தொடர்பில் பொய்யான விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

அரசியல் நோக்கங்களின் அடிப்படையில் கொரோனா வைரஸ் தொற்று குறித்த புள்ளி விபரத் தகவல்களை வெளியிடுவதை தவிர்க்குமாறும் அனில் ஜாசிங்க, அரசியல்வாதிகளிடம் கோரிக்கை விடுத்தார்.



பிழையான தகவல்களை வெளியிடுவது கொரோனா நோய்த் தொற்று பரவுதலை கட்டுப்படுத்துவதற்கு சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு இடையூறாக அமையும் என அவர் தெரிவித்துள்ளார்.

சுகாதாரப் பிரிவினர் இந்த நோயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை விஞ்ஞானபூர்வ அடிப்படையிலேயே மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் சில அரசியல்வாதிகள் பிழையான தகவல்களை வெளியிடுவது தொற்று பரவுகையை ஒழிப்பதில் சிக்கல்களை ஏற்படுத்தும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நோய்த் தொற்றால் இலங்கையில் உயிரிழந்தோர் எண்ணிக்கை ஒரு வீதம் எனவும் வளர்ச்சியடைந்த நாடுகளில் 13 வீதமாக இந்த எண்ணிக்கை அமைந்துள்ளது எனவும் அனில் ஜாசிங்க தெரிவித்தார். (இ-7)

# வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளான ஹயஸ்

## சாரதி காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை பகுதியில் ஹயஸ் ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றது.

விபத்தில் காயமடைந்த ஹயஸ் சாரதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.



இச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# ஏப்ரல் மாதம் சேவைகளைப் பெற்றுக்கொண்ட ஊழியர்களுக்கு சம்பளத்தை வழங்க வேண்டும்

## தொழில் ஆணையாளர் வலியுறுத்து

(கொழும்பு)

ஏப்ரல் மாதம் முழுமையாக சேவைகளை பெற்றுக்கொண்ட அனைத்து ஊழியர்களுக்கும் சம்பளத்தை வழங்க தொழில் வழங்குநர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தொழில் ஆணையாளர் ஆர்.ஜீ.ஏ. விமலவீர தெரிவித்தார்.

இவ்வாறான ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படவில்லை என்றால், அது குறித்து தொழில் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யுமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

கொரோனா வைரஸ் காரணமாக அலுவலகத்திற்கு செல்லாது வீட்டில் இருக்கும் ஊழியர்களுக்கு சம்பளத்தை வழங்குவது தொடர்பான யோசனை ஒன்றை தொழில் அமைச்சு முன்வைக்கவுள்ளது.

அதேவேளை கொரோனா வைரஸ் பரவல் காரணமாக பாதிப்புக்குள்ளான தனியார் நிறுவனங்கள் சம்பந்தமான தகவல்களை வழங்கும் கால அவகாசம் இம்மாதம் 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. இந்த கால அவகாசம் கடந்த 3 ஆம் திகதி முடிவடையவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வீடு தெரியாததால் ஹோட்டலில் உள்ளேன் கப்ராலின் மகன் பதிவு

(கொழும்பு)

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநரும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் பொருளாதார ஆலோசகருமான அஜிட் நிவாட் கப்ரால், தன்னுடைய மகன் நீண்ட நாட்களாக நாடு திரும்பவில்லை என்றும் அவரையும் அழைத்து வருவதற்காக ஸ்ரீலங்கன் விமானம் சேவை விமானம் லண்டனுக்கு செல்லவில்லை எனத் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், அவருடைய மற்றொரு மகனான சத்துர கப்ரால், நேற்று முன்தினம் நாடு திரும்பிய நிலையில், கட்டுநாயக்கவிலுள்ள ஆடம்பர ஹோட்டலில் தனிமைப்படுத்தப்பட்டார். இந்நிலையில் சத்துர கப்ரால் தன்னுடைய பேஸ்புக்கில் பதிவொன்றை இட்டுள்ளார்.

அதில், "தலவத்துகொட- அக்குரகொடவிலுள்ள வீடு எனக்குத் தெரியாது. அதனால் தான் ஜெட்விங் ஹோட்டலில் தங்கியிருக்கின்றேன்" என்று பதிவிட்டார். (இ-7)

# ஹெரோயினுடன் இருவர் கைது

(கொழும்பு)

கொழும்பு - மாளிகாவத்த பகுதியில் ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

மாளிகாவத்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெத்தாராம விகாரை வீதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் முன்னெடுத்த சோதனை நடவடிக்கைகளின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

இதன்போது 28,30 வயதுடைய நபர்கள் இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதுடன், ஒரு சந்தேக நபரிடமிருந்து 7 கிராம் 130 மில்லிகிராம் ஹெரோயினும், மற்றைய சந்தேக நபரிடமிருந்து 5 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டது.

மாளிகாவத்த பொலிஸார் சந்தேக நபர் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# அநாதரவாக இருந்த முதியவர் வைத்தியசாலையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

அநாதரவான நிலையில் இருந்த வயோதிபர் ஒருவர் பொதுச் சுகாதாரப் பரிசோதர்களால் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

கடந்த சில நாட்களாக கீரிமலைப் பகுதியில் 80 வயது மதிக்கத்தக்க முதியவர் ஒருவர் நடமாடியதாக பொதுமக்களால் கிராம உத்தியோகத்தர், பொலிஸார், தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் நேற்றுக் காலை 7.30 மணியளவில் அம்புலன்ஸ் மூலம் அழைத்து வரப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (இ-5-17)

# படகுகளில் கடற்றொழிலுக்குச் செல்வோரின் எண்ணிக்கையை தொழிலாளர்களே தீர்மானிக்க அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவலை அடுத்து படகுகளில் கடற்றொழிலுக்குச் செல்வோரது எண்ணிக்கை 2 பேராக வரையறை செய்யப்பட்டிருந்த நிலையில் கடற்றொழிலாளர்களது நலன்களை அடிப்படையாகக் கொண்டு சுகாதாரத் தரப்பினரது ஆலோசனைக்கு அமைய தொழிலின் தேவைக்கு ஏற்ப கடற்றொழிலுக்குச் செல்வதற்கான அனுமதியை கடற்றொழில் மற்றும் நீரியல்வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கினார்.

அமைச்சின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் குறித்த அதிகாரிகளுடன் பேச்சுக்களை மேற்கொண்டு சுகாதாரத் தரப்பினரது ஆலோசனையைப் பெற்றுக்கொண்டபின் அமைச்சரால் உரிய அதிகாரிகளுக்கு இவ்வாறு அறிவுறுத்தப்பட்டது.

கொரோனாத் தொற்றின் பரவல் காரணமாக சுகாதாரத் தரப்பினரது ஆலோசனைக்கு அமைய சமூக இடைவெளியைப் பேணும் முகமாக கடற்றொழிலுக்குப் படகில் செல்லும் தொழிலாளர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டிருந்ததை அடுத்து அந்த முறைமையால் தமது தொழில் நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்படுவதாக தெரிவித்து கடற்றொழிலாளர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்தனர்.

இந்நிலையில் குறித்த பிரச்சினைக்கான தீர்வைத் பெற்றுக் கொடுக்கும் முகமாக துறைசார் அதிகாரிகளுடன் அமைச்சர் டக்ளஸ் ஆலோசனை மேற்கொண்டார்.



இதனடிப்படையில் சுகாதாரத் தரப்பினரது ஆலோசனையுடன் அந்தந்தப் பிரதேசங்களின் கடற்றொழில் உதவிப்பணிப்பாளர்கள் மற்றும் மாவட்ட கடற்றொழில் பணிப்பாளர்களது ஆலோசனைகளுடன் உரிய முறையில் அனுமதி பெற்று தொழில் நடவடிக்கைக்கு தேவையான தொழிலாளர்களுடன் படகுகளில் கடற்றொழிலுக்குச் செல்ல அனுமதி வழங்குமாறு துறைசார் தரப்பினருக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்தார்.

அத்துடன் அமைச்சரின் அலுவலகத்தில் நடைபெற்ற அதிகாரிகளுடனான சந்திப்பின் போது கொரோனா அச்சுறுத்தல் காலத்தில் கடற்றொழில் சார்ந்து முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பிலான முன்னேற்ற அறிக்கைகள் தொடர்பில் ஆராயப்பட்டதுடன் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள செயற்றிட்டங்கள் தொடர்பிலும் கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் அமைச்சு அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மீண்டும் ஒரே நாளில் 2 ஆயிரத்து 333 பேர் மரணம்

# கொரோனாவின் கோரப்பிடிக்குள் அமெரிக்கா 72 ஆயிரத்தைக் கடந்தது பலி எண்ணிக்கை



(நியூயோர்க்)

அமெரிக்காவில் கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு நேற்று முன்தினம் ஒரே நாளில் 2 ஆயிரத்து 333 பேர் பலியாகினர். இதனால் அங்கு வைரஸிக்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 72 ஆயிரத்தைக் கடந்தது.

உலகையே உலுக்கி வரும் கொரோனா வைரஸால் பாதிப்படைந்தோர் எண்ணிக்கை 37 இலட்சத்தைத் தாண்டியது.

வைரஸ் பரவி சிகிச்சை பெறுபவர்களில் 49 ஆயிரத்து 300 இற்கும் மேற்பட்டோரின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாகவுள்ளது.

கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களில் 12 இலட்சத்து 27 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் சிகிச்சைக்குப் பின் குணமடைந்தனர். ஆனாலும், இந்தக் கொடிய வைரஸிக்கு 2 இலட்சத்து 56 ஆயிரத்து 303 பேர் உயிரிழந்தனர்.

சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட கொடிய கொரோனா வைரஸ் தற்போது அமெரிக்காவைப் புரட்டியெடுத்து வருகிறது. உலகளவில் வைரஸால் பாதிப்பு மற்றும் உயிரிழப்பு எண்ணிக்கையில் அமெரிக்கா முதலிடத்திலுள்ளது.

இந்நிலையில், கொரோனாத் தாக்குதலுக்கு அந்நாட்டில் பலியானோர் எண்ணிக்கை 72 ஆயிரத்தைக் கடந்தது.

நேற்றுக்காலை 9 மணி நிலவரப்படி அமெரிக்காவில் 12 இலட்சத்து 37 ஆயிரத்து 633 பேருக்கு வைரஸ் பரவியது உறுதியானது.

மேலும், அந்நாட்டில் வைரஸ் தாக்குதலுக்கு நேற்று முன்தினம் ஒரே நாளில் 2 ஆயிரத்து 333 பேர் பலியாகினர். இதனால் அமெரிக்காவில் கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 72 ஆயிரத்து 271 ஆக அதிகரித்தது. (இ-7)

# 50 ஆயிரத்தை நெருங்கியது பாதிப்பு எண்ணிக்கை இந்தியாவில் கொரோனாவால் 1700 பேர் மரணம்



(டில்லி)

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 50 ஆயிரத்தை நெருங்கியுள்ள நிலையில், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 1700 ஆக அதிகரித்தது.

இந்தியாவில் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவி வருகிறது. ஊரடங்கு உத்தரவு. நோய் அறிகுறி உள்ளவர்களைத் தனிமைப்படுத்தி சிகிச்சையளித்தல் உள்ளிட்ட பல்வேறு நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக நடைபெறுகின்றன. கொரோனா பாதிப்பு குறைவாக உள்ள பகுதிகளில் ஊரடங்கு தளர்த்தப்பட்டது.

எனினும் பரிசோதனைகளை அதிகரிக்க அதிகரிக்க, புதிய நோயாளிகளின் எண்ணிக்கையும் உயர்ந்து வருகிறது. உயிரிழப்பும் கணிசமாக உயர்கிறது.

இந்நிலையில் மத்திய சுகாதாரத்துறை நேற்றுக்காலை வெளியிட்ட தகவலின்படி, இந்தியாவில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 49 ஆயிரத்தைக் கடந்தது. மொத்தம் 49 ஆயிரத்து 391 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டனர். நேற்றுக்காலை 9 மணியளவில் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் 2958 பேருக்கு நோய்த்தொற்று உறுதி செய்யப்பட்டது. 126 பேர் உயிரிழந்தனர்.

இதன்மூலம் கொரோனா வைரஸால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 1694 ஆக உயர்ந்தது. 14 ஆயிரத்து 182 பேர் கொரோனா பாதிப்பிலிருந்து மீண்டனர்.

கொரோனா பாதிப்பில் மகாராஷ்டிரா தொடர்ந்து உச்சத்தில் உள்ளது. அங்கு 15 ஆயிரத்து 525 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. 617 பேர் பலியாகினர். குஜராத்தில் 6245 பேருக்கும், டில்லியில் 5104 பேருக்கும், தமிழகத்தில் 4058 பேருக்கும், மத்திய பிரதேசத்தில் 3049 பேருக்கும், இராஜஸ்தானில் 3158 பேருக்கும், உத்தர பிரதேசத்தில் 2880 பேருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது. (இ-7)

## 60 பொலிஸாரிடம் பி.சி.ஆர்.பரிசோதனை

(பேருவளை)

பேருவளை பகுதியில் கடமையில் ஈடுபட்ட 60 பொலிஸார் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். இதேவேளை பரிசோதனை முடிவில் எவருக்கும் தொற்று உறுதி செய்யப்படவில்லை.

பேருவளை, சீனன்கொட்டுவ, பன்னில உள்ளிட்ட பகுதிகளில் கொரோனாத் தொற்றாளர்கள் அதிகளவில் பதிவாகினர்.

இதனைத் தொடர்ந்தே 60 பொலிஸாரிடம் பி.சி.ஆர். பரிசோதனை செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கொரோனாவை அழிக்கும் பிறபொருளெதிரியை உருவாக்கிய இஸ்ரேல்

(ஜெருசலேம்)

கொரோனா வைரஸை (கொவிட்- 19) அழிக்கும் பிறபொருளெதிரியை (Antibody) உருவாக்கியுள்ளதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது. இஸ்ரேலிய பாதுகாப்பு உயிரியல் ஆராய்ச்சி ஆய்வகத்தில் (ஐ.ஐ.பி.ஆர்) இதற்கான ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது.

இதுகுறித்து இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் நப்தாலி பென்னட் கூறுகையில், 'இது கொரோனா தொற்றுநோய்க்கு சாத்தியமான சிகிச்சையை நோக்கிய குறிப்பிடத்தக்க முன்னேற்றம்.

பாதுகாப்பு உயிரியல் ஆராய்ச்சிக்கான இஸ்ரேல் நிறுவனமான (ஐ.ஐ.பி.ஆர்)இல் உருவாக்கப்பட்ட மோனோக்ளோனல் நியூட்ராலைசிங் பிறபொருளெதிரி (Antibody) நோயாளிகளின் உடல்களுக்குள் நோயை உருவாக்கும் கொரோனா வைரஸை அழிக்கும்' என கூறினார்.

மேலும் இதுகுறித்து இஸ்ரேலிய பாதுகாப்பு உயிரியல் ஆராய்ச்சி ஆய்வகத்தின் இயக்குநர் சாமுவேல் ஷாபிரா கூறுகையில், 'பிறபொருளெதிரி செய்முறை காப்புரிமை பெறுகிறது. அதன் பிறகு சர்வதேச உற்பத்தியாளர் அதை பெருமளவில் உற்பத்தி செய்ய முற்படுவார்' எனக் கூறினார். (இ-7)

## கொன்று குவிக்கும் கொரோனா

# இத்தாலியைப் பின்னுக்குத் தள்ளியது இங்கிலாந்து

## 29 ஆயிரத்தைத் தாண்டியது பலி எண்ணிக்கை



(லண்டன்)

கொரோனா வைரஸ் பாதித்த ஐரோப்பிய நாடுகளில் இத்தாலியைப் பின்னுக்குத் தள்ளி இங்கிலாந்து முதலிடத்தைப் பிடித்தது.

கொரோனா வைரஸ் உலகளவில் தினந்தோறும் பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பலியெடுத்து வருகிறது. இந்த ஆட்கொல்லிக்கு எதிராக தடுப்பூசியோ, தடுப்பு மருந்துகளோ இதுவரை கண்டு பிடிக்கப்படாததால், கொரோனாவின் கோரத்தாண்டவம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

உலகளவில் அமெரிக்காவை மிகவும்பாதித்துள்ள இந்த வைரஸ் மற்றொரு வல்லரசு நாடான இங்கிலாந்தையும் விட்டு வைக்கவில்லை. அங்கும் பலி எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இந்நிலையில், கொரோனா பாதித்த ஐரோப்பிய நாடுகளில் இத்தாலியைப் பின்னுக்குத் தள்ளி இங்கிலாந்து முதல் இடத்தைப் பிடித்தது.

இங்கிலாந்தில் கடந்த ஒரு வாரத்தில் 7 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொரோனாத் தொற்றுக்குப் பலியாகினர்.

இதையடுத்து. ஐரோப்பா கண்டத்தில் கொரோனாவுக்கு அதிக மக்களைப் பலி கொடுத்த நாடுகளின் பட்டியலில், இத்தாலியைப் பின்னுக்குத் தள்ளி முதல் இடத்தைப் பிடித்தது.

தேசிய புள்ளி விபரங்களுக்கான அலுவலகம் நேற்றுக் காலை வெளியிட்ட தகவலின் படி, இங்கிலாந்தில் கொரோனா வைரஸ் இறப்பு எண்ணிக்கை 29 ஆயிரத்தைத் தாண்டியது. இதன்மூலம் உலகில் இரண்டாவது இடத்தில் இங்கிலாந்து உள்ளது. (இ-7)

# சிகை அலங்கரிப்பு மட்டுமே! முகச் சவரம் மேற்கொள்ளப்படாது

## கிளி.அழகக சங்கம் தெரிவிப்பு

(முறிகண்டி)

சுகாதார முறைப்படி சிகை அலங்கரிப்பு வேலைகளை மாத்திரம் முன்னெடுக்கப்படும் என்பதுடன் முகச்சவரம் மேற்கொள்ளப்படமாட்டாது என கிளிநொச்சி மாவட்ட அழகக சங்கம் தெரிவித்துள்ளது. கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்படி சங்கத்தினர் தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்ட அழகக சங்கத்தின் செயலாளர் தர்மராசா யுகேசன் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

முறையான சுகாதார முறைப்படி சிகை அலங்கார வேலைகள் முன்னெடுக்கப்பட உள்ளன. அதற்கு அமைவாக சிகை அலங்கார வேலைக்கு வருகைதரும் வாடிக்கையாளர்கள் அங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை பின்பற்ற வேண்டும் என தெரிவித்தார். அதேவேளை வருகை தரும் வாடிக்கையாளர்கள் சுகாதாரத்தை பிற்பற்றும் வகையிலும், தொற்றுக்களிலிருந்து பாதுகாக்கும் வகையிலும் போர்வை துணிகளைகொண்டு வர வேண்டும். அதேவேளை வீடுகளிற்கு அழைத்து சிகை அலங்காரம் செய்யும் சந்தர்ப்பங்களில் பாதுகாப்பு தொடர்பில் மக்கள் கவனம் செலுத்த வேண்டும், பாதுகாப்பற்ற முறையில் வீடுகளிற்கு அழைத்து வேலைகளை செய்வதால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பில் மக்கள் அவதானமாக இருக்கும் வகையில் அவ்வாறு வீடுகளிற்கு அழைப்பதை தவிர்க்க வேண்டும்.

கடைகளில் காட்சிப்படுத்தப்படும் நடைமுறைகளை வாடிக்கையாளர்கள் பின்பற்றி ஒத்துழைப்பு வழங்குவதுடன், முறையான சுகாதாரத்தை பேண வேண்டும்.

அதேவேளை சில காரணங்களிற்காக முடிவெட்டுவதற்காக அறவிடப்படும் பணத்தினை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்படும் எனவும் அவர் தெரிவித்தார். (9-100)

# வெதுப்பக உணவுப்பொருட்களை விற்பனை செய்பவர்களுக்கான விழிப்புணர்வு





(நெளுக்குளம்)

வவுனியாவில் வெதுப்பக உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் முச்சக்கரவண்டிகளுக்கான விசேட பரிசோதனையும், விற்பனையாளர்களிற்கான விழிப்புணர்வு கருத்தரங்கும் நேற்று வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இடம் பெற்றது.

கொரோனா தொற்று பரவலை தடுக்கும் முகமாக வவுனியா சுகாதார பிரிவினர் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். இதன் ஒரு கட்டமாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பளரின் வழிநடத்தலின் பிரகாரம் சுகாதார வைத்திய அதிகாரியின் ஆலோசனைக்கு அமைவாக மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் க.மேஜெயா மற்றும் பொதுச் சுகாதார பரி சோதகர்களான சிவரஞ்சன், கோல்டயன் உள்ளடங்கிய குழுவினரால் முச்சக்கரவண்டிகள் பரிசோதனை செய்யப்பட்டதோடு விழிப்புணர்வு கருத்தரங்கும் மேற் கொள்ளப்பட்டது.

இதன் போது பேக்கரி பொருட்களை கொண்டு செல்லும் முச்சக்கரவண்டிகளின் தரம், பொருட்களை நுகர்வோருக்கு வழங்கும் முறை, கையுறைகளின் தன்மை என்பன தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டதோடு, ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. (9-250-299)




# சமகால நிலைமை தொடர்பில் வவுனியாவில் கலந்துரையாடல்



(குருமன்காடு)

கொவிட்-19 தாக்கம் மற்றும் அது தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பிலும், சமகால நிலைமைகள் தொடர்பிலும் விசேட கூட்டம் வவுனியா மாவட்ட அரச அதிபர் சமன் பந்துலசேன தலைமையில் வவுனியா மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது கொவிட் 19 தாக்கம் தொடர்பில் வவுனியாவின் தற்போதைய நிலை, கொவிட் தாக்கத்தை கட்டுப்படுத்த மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கைகள், அரசாங்கத்தின் நிவாரண உதவிகள், வவுனியா மாவட்டத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

இக்கலந்துரையாடலில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான கே.கே.மஸ்தான், சிவசக்தி ஆனந்தன், சாள்ஸ் நிர்மலநாதன், சாந்தி சிறிஸ்கந்தராஜா, சிவமோகன், முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பிரதி பொலிஸ்மா அதிபர், இராணுவ அதிகாரிகள், திணைக்கள தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (9-250)

# மன்னாருக்கு தீயணைப்பு வாகனம் வழங்குவது தற்போது சாத்தியமில்லை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திற்கு உடனடியாக வழங்குவதற்கு தற்போது இலங்கை அரசாங்கத்திடம் எந்த ஒரு தீயணைப்பு வாகனமோ அல்லது தீயணைப்பு படை பிரிவோ இல்லை என பிரதமர் மகிந்த ராஜபக்ஷவினால் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக இடம்பெறும் தீ விபத்துக்கள் தொடர்பாகவும் மன்னாரில் இதுவரை தீயணைப்பு வாகனமோ கருவிகளோ இல்லாமை தொடர்பாக பிரதமருடனான சந்திப்பின் போது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் பிரதமரின் கவனத்துக்கு கொண்டு வந்தேன். குறித்த விடயம் தொடர்பாக உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் தொடர்பு கொண்டு அறிந்து கொண்ட பிரதமர் தற்போது இலங்கை அரசாங்கத்தின் கையிருப்பில் தீயணைப்பு வாகனம் அல்லது தீயணைப்பு துறை ஏற்பாடு இல்லாத காரணத்தினால் தற்போது உடனடியாக மன்னார் மாவட்டத்துக்கோ முல்லைத்தீவு மாவட்டத்துக்கோ தீயணைப்பு வாகனம் வழங்க முடியாத நிலை காணப்படுவதாக தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பாக உடனடியாக கவனம் செலுத்தி கொரோனா அச்சுறுத்தல் நீங்கிய பின்னர் புதிய தீயணைப்பு கையிருப்பு கிடைக்கப்பெறும் போது தற்போதைய அரசாங்கத்தின் விசேட செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷவூடாக மன்னார் மாவட்டத்திற்கும் முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் என தனியான அலகை வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதாக உறுதி அளித்ததுடன் அதற்கான நடவடிக்கையை முன்னுரிமை அடிப்படையில் நடைமுறைப்படுத்துமாறும் பசில் ராஜபக்ஷவிடம் பணிக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரச்சினை தொடர்பான எழுத்து மூல கோரிக்கையும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டுள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார். (9-285)

# சலவைத் தொழிலாளர்கள் பாதிப்பு

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சலவைத்தொழிலாளர்கள் கடந்த இரண்டு மாதகாலமாக நாளாந்த வருமானம் இன்றி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோன வைரஸ் தொற்று காரணமாக மக்களின் அன்றாட செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. இந்த நிலையில் சலவைத் தொழிலாளர்களும் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

சலவை செய்வதற்கு மக்கள் வருவது முற்றாக தடைப்பட்டுள்ளதாகவும் நாளாந்த ஜீவனோபாயத்திற்கு மிகவும் கஷ்டப்பட்டுவதாகவும் கவலை வெளியிட்டுள்ளனர்.

தாம் வருமானம் ஈட்டக்கூடிய வழிகளை மேற்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். (9-316)

# சிறிசபாரத்தினத்தின் 34 ஆவது ஆண்டு நினைவேந்தல்







(குருமன்காடு)

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் சிறிசபாரத்தினத்தின் 34 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) அலுவலகத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இவ் அஞ்சலி நிகழ்வில் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை தவிசாளர் து.நடராஜசிங்கம், பிரதேச சபை உறுப்பினர் அஞ்சலா கோகுலகுமார் மற்றும் கட்சி உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

அதேவேளை தமிழீழ விடுதலை இயக்கத்தின் முல்லைத்தீவு மாவட்ட அலுவலகத்தில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஆண்டிஐயா புவனேஸ்வரன் தலைமையில் நேற்றுக் காலை இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (9-250-281)

# நானாட்டான் பிரதேச சபை உறுப்பினர் காலமானார்



(மன்னார்)

நானாட்டான் பிரதேச சபை உறுப்பினர் றாசீக் பரீது தனது 63 ஆவது வயதில் நேற்று புதன்கிழமை அதிகாலை காலமாகினார்.

திடீர் சுகயீனம் காரணமாக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு றகூழ் புதுவெளி கிராமத்தில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து முருங்கன் வைத்திய சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

இந்த நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பாக கடந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் நானாட்டான் பிரதேச சபை தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (9-285)

# தொடர்ச்சியாக ஏமாற்றப்படும் பட்டதாரிகள்!

## அரசு, தேர்தல்கள் ஆணைக்குழு மீது இம்ரான் பாய்ச்சல்

(கிண்ணியா)

பட்டதாரி பயிலுநராக நியமனம் பெற்றவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்துள்ளார்.

கிண்ணியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில், நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் நியமனம் வழங்க முடியாது எனத் தெரிந்தும் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதன் பின்னர் பட்டதாரிகளுக்கான நியமனக் கடிதம் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டது.

அரசாங்கத்துக்கு பட்டதாரிகளுக்கான நியமனம் வழங்க வேண்டும் என்ற நோக்கம் இருப்பின் நாடாளுமன்றம் கலைக்கப்பட முன்னர் நியமனம் வழங்கப்பட்டிருக்க வேண்டும். அல்லது நியமனம் வழங்கப்பட்ட பின்னர் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டிருக்க வேண்டும்.

அதன்பின் இவர்களின் பயிற்சி தேர்தல்கள் ஆணையாளரால் இடைநிறுத்தப்பட்ட போது பட்டதாரிகளை வீட்டில் வைத்தே அவர்களுக்கான சம்பளத்தை வழங்குவோம் என பிரதமர் கூறினார். அதேபோல் அவர்களுக்கான மார்ச் மாத கொடுப்பனவு வழங்கப்படும் என ஜனாதிபதி கூறினார். ஆனால் எதுவித கொடுப்பனவும் அந்த மாதம் வழங்கப்படவில்லை.

அதன்பின் கொரோனா தடுப்புப் பணிகளுக்காக பட்டதாரிகளை இணைத்துக்கொள்வதாக கூறினார். அதன்பின் தேர்தல்கள்



ஆணையாளர் அவ்வாறு அவர்களைப் பணியில் அமர்த்த முடியாது எனக் கூறியதாக கூறி அதையும் நிறுத்தினார்.

அதன்பின் கடந்த வாரமளவில் பட்டதாரிகளுக்கு இருபதாயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்க அமைச்சரவையில் முடிவெடுக்கப்பட்டுள்ளதாக கூறி அதையும் தேர்தல் ஆணையாளர் இடை நிறுத்தியுள்ளதால் வழங்க முடியாது என இப்போது கூறுகின்றனர்.

இவ்வாறு பயிற்சி வழங்குகின்றோம், கொடுப்பனவு வழங்குகின்றோம் என அரசாங்கம் கூறுவதும் பின் தேர்தல்கள் ஆணையாளர் அதை இடைநிறுத்துவதுமாக மாறி மாறி நடிப்பதில் பாதிக்கப்படுவது பட்டதாரிகளே.

அரசாங்கத்தால் வழங்கும் ஐயாயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்கும்போது அதை இடைநிறுத்தாத தேர்தல்கள் ஆணையாளர் பட்டதாரிகள் விடயத்தில் மட்டும் இவ்வாறு நடந்து கொள்வது வேதனையளிக்கிறது.

இவ்வாறு பட்டதாரிகளாக நியமனம் பெற்ற பலர் இந்த வேலையை நம்பி தாம் முன்னர் செய்த வேலைகளை விட்டவர்கள். செய்த வேலையும் இல்லாமல் இந்த வேலையும் இல்லாமல் இந்தச் சமயத்தில் வருமானத்துக்கு பல சிரமங்களை எதிர்கொள்வதாக பட்டதாரிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

எனவே பயிற்சி தருகின்றோம் கொடுப்பனவு தருகின்றோம் என்று நாளுக்கு நாள் பட்டதாரிகளை ஏமாற்றாமல் தேர்தல் ஆணையாளருடன் கலந்து பேசி பட்டதாரிகளுக்கு நியாயமான தீர்வொன்றை பெற்றுக்கொடுக்குமாறு அரசாங்கத்திடம் பட்டதாரிகள் சார்பாக கேட்டுக்கொள்கின்றேன். இதற்கு தேவையான சகல ஒத்துழைப்புக்களையும் வழங்க ஐக்கிய மக்கள் சக்தி என்ற ரீதியில் நாம் தயாராகவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 3<br>கி.பா: 60 செவ் 4 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:க.பொ.த.உ/த., தனியார் வங்கி ஊழியர்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/10708 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: - செவ் 12 இல்<br>உயரம்: தகைமை/தொழில்: Hospitality Management final year.<br>எதிர்பார்ப்பு: படித்த பொருத்தமான மணமகன்<br>தொ.இ: G/10717 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 38 செவ் 12 இல்<br>உயரம்: 167 CM<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த., தனியார் வங்கி ஊழியர்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/10709 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 2<br>கி.பா: செவ் 4 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BBM, Srilanka Telecom வாடிக்கையாளர் சேவை<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம், பட்டதாரி மணமகன்<br>தொ.இ: G/10718 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 4<br>கி.பா: 24 ½ செவ் 1 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த., கனடாவில் பணி புரிகின்றார்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண், வெளிநாடு செல்ல வேண்டும்.<br>தொ.இ: B/10710 | பிறப்பு: 1992 கிறிஸ்தவம்(R.C)<br>நட்சத்திரம்: ரேவதி 4<br>கி.பா: 24 செவ் 1 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: பட்டதாரி, முகாமைத்துவ உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/10719 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 4<br>கி.பா: 53 செவ் 8 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. லண்டனில் பணி புரிகின்றார்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/10711 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 3<br>கி.பா: 73 செவ் 9 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: B.Sc, ஆசிரியை<br>எதிர்பார்ப்பு: B.Sc பட்டதாரி, உயர் தொழில்<br>தொ.இ: G/10720 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# கொரோனாவால் பெண் மரணம் 1200 பேர் தனிமைப்படுத்தல்

(கொழும்பு)

நாட்டில் கொரோனாவால் ஒன்பதாவது உயிரிழப்பு சம்பவம் இடம்பெற்ற கொழும்பு - 15, மோதரையிலுள்ள மெத்சந்த செவன வீட்டுத் திட்டத்தில் வசிக்கும் ஒரு குழுவினரை பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்த உத்தரவிடப்பட்டது.

அதன் முதற்கட்டமாக 60 பேர் பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தப்படுவர்கள் என்று சுகாதார பிரிவினர் தெரிவித்தனர்.

அத்துடன் மெத்சந்த வீட்டுத் திட்டத்தின் பி பிரிவில் 1,200 குடியிருப்பாளர்களை சுய தனிமைப்படுத்தலுக்குட்படுத்துமாறும் ஆலோசனை வழங்கப்பட்டது.

இதேவேளை ராஜகிரிய, பண்டாரநாயக்கபுர மற்றும் கொலன்னாவை, சாலமுல்ல பகுதியைச் சேர்ந்த குடியிருப்பாளர்களையும் பி.சி.ஆர். சோதனைக் குட்படுத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதற்கிடையில் நேற்று முன்தினம் 1,396 பி.சி.ஆர்.சோதனைகள் நடத்தப்பட்டதுடன், பெப்ரவரி 18 ஆம் திகதி முதல் 29 ஆயிரத்து 283 பி.சி.ஆர்.சோதனைகள் நடத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கொழும்பு 15, முகத்துவாரம் பொலிஸ் பிரிவின் மெத்சந்த செவன தொடர் மாடி குடியிருப்பைச் சேர்ந்த 52 வயது பெண் ஒருவர் அங்கொடை தொற்று நோய் தடுப்பு வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

முகத்துவாரம் - மெத்சந்த செவன தொடர்மாடி குடியிருப்பில் வசிக்கும் 5 பிள்ளைகளின் தாயொருவர், மூச்சுத் திணறல் காரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இதன்போது அங்கு அவருக்கு பி.சி. ஆர். எனும் கொரோனா வைரஸ் தொற்றைக் கண்டறியும் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது, அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில், உடனடியாக அங்கொடை தொற்று நோய் தடுப்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அப்போதும் குறித்த பெண்ணின் நிலை தீவிரமாக இருந்ததால், உடனடியாகவே தொற்று நோய் தடுப்பு வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அவருக்கு சிகிச்சையளிக்கப்பட்டது.

இவ்வாறான நிலையில், நேற்று முன்தினம் காலை குறித்த பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கொரோனாவுக்கு மருந்து கண்டுபிடிக்க வாய்ப்பில்லை

## மருத்துவர் டேவிட் நெப்ரோ திட்டவட்டம்

(ஜெனிவா)

கொவிட் - 19 என்ற கொரோனா வைரஸ் நோயைக் குணப்படுத்தும் ஊசி மருந்து கண்டுபிடிக்கப்பட வாய்ப்பில்லை என உலக சுகாதார அமைப்பின் கொவிட் - 19 தொடர்பான விசேட பிரதிநிதி மருத்துவர் டேவிட் நெப்ரோ தெரிவித்தார்.

நூறுக்கும் மேற்பட்ட மருந்துக்கள் ஆய்வு மட்டத்தில் இருப்பதுடன் இரண்டு மருந்துகள் மனிதர்களைப் பயன்படுத்தி பரிசோதித்த பின், சுகாதார அமைப்பின் கொவிட் - 19 தொடர்பான விசேட பிரதிநிதி வெளியிட்டுள்ள இந்தக் கருத்துக் குறித்து முழு உலகமும் கவனம் செலுத்தி வருகிறது.

எச்.ஐ.வி. மற்றும் டெங்கு நோய்களுக்கான மருந்துகளைக் கண்டுபிடிக்கும் பரிசோதனைகளும் இதுவரை வெற்றி பெறவில்லை. கடந்த 4 ஆண்டுகளில் எச்.ஐ.வி. வைரஸ் தொற்றிய 32 மில்லியன் மக்கள் உயிரிழந்துள்ளனர்.

ஒரு வைரஸின் ஆபத்து இதுதான் எனக் கூறியுள்ள மருத்துவர் டேவிட் நெப்ரோ, கொரோனா வைரஸுக்காக மருந்து தொடர்பாக எப்படியான எதிர்பார்ப்புகளை கொண்டிருந்தாலும் இறுதியில் அவையனைத்தும் சிதைந்து போக வாய்ப்புள்ளதாகவும் சுட்டிக்காட்டினார். (ஐ)

## கொரோனா அச்சம் காரணமாக

# இலத்திரனியல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வெசாக் பண்டிகையை கொண்டாட அரசு தீர்மானம்



(கொழும்பு)

உலகெங்கிலும் வாழும் பௌத்த மக்களுடன் இணைந்து இலங்கை வாழ் பௌத்தர்களும் பௌத்த சமயத்தின் அதி உன்னத சமய விழாவான வெசாக் பண்டிகையை மிகுந்த சமயப்பற்றுடன் கொண்டாடுகின்றனர். எமது நாட்டில் பௌத்த சமயத்தவர்கள் பண்டைய காலம் முதல் புத்த பெருமான் மீதான பக்தியுடன் புண்ணிய கிரியைகளில் ஈடுபட்டு வெசாக் பண்டிகைக் காலத்தை கழிக்கும் வழமை இருந்து வருகின்றது.

முழு மனித சமூகத்தையும் நோய்த் தொற்று அச்சுறுத்திக் கொண்டிருக்கும் ஒரு சூழ்நிலையிலேயே உலகெங்கிலும் வாழும் பௌத்தர்களை போன்று நாமும் இம்முறை வெசாக் பண்டிகையின் சமய சம்பிரதாயங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இத்தகைய அனர்த்தங்கள் மனித வரலாற்றில் ஏற்படுவது மிக அரிதானவையல்ல. புத்தபெருமான் உயிர்வாழ்ந்த காலத்தில் தம்பதிவை விஷாலா நகரம் முப்பெரும் அச்ச சூழ்நிலைகளுக்கு உட்பட்டிருந்தது. புத்தபெருமானின் போதனையின் பேரில் மேற்கொள்ளப்பட்ட பிரித் பாராயணத்தின் மூலம் அவ்வனர்த்தம் முடிவுக்கு வந்தது. பௌத்த சமயம் போதிக்கும் போதனைகளை பின்பற்றி எமக்கும் இந்த வெசாக் காலத்தில் உடல் மற்றும் ஆன்மீக ஆரோக்கியத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பது எனது நம்பிக்கையாகும் என ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

தற்போதைய நிலையில் அரச வெசாக் பண்டிகையை இலத்திரனியல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நடத்துவதற்கு மகா சங்கத்தினரின் வழிகாட்டலும் ஆசிர்வாதமும் கிடைக்கப் பெற்றுள்ளது. எனவே வீடுகளில் இருந்து புத்தபெருமான் மீதான பக்தியுணர்வுடன் சமயக் கிரியைகளில் ஈடுபட எமக்கு முடியும்.

"தஞ்சகம்மன்கதன்சாது-யன் கத்வாநானுதபப்தி யஸ்ஸபதீதோசுமனோ-விபாகங்படிசெவதி"

"தீயகாரியங்களைச் செய்தவர், தாம் செய்தகர்மங்களுக்காக ஏங்குகிறார்கள். அதன் பயனைக் கண்ணீர் ததும்பும்முகத்துடன் அழுது கொண்டே அனுபவிக்கிறார்கள். நல்ல காரியங்களைச் செய்தவர், தாம் செய்த நல்ல காரியத்திற்காக ஏங்கித்தவிப்பதில்லை. அதன்பயனை இன்பமாகவும் உவகையுடனும் அனுபவிக்கிறார்கள்" என தம்மபதத்தில் குறிப்பிடப்படுகின்றது. இந்த வெசாக் காலத்தில் புத்த பெருமான் போதித்தபடி, பின்னால் வருந்துவதற்கு காரணமாக அமைகின்ற விடயங்களை செய்யாது எமது முன்னோக்கிய பயணத்தை சிறந்ததாக அமைத்துக் கொள்ள முடியும்.

இந்த அனர்த்த சூழ்நிலையில் புத்தபெருமானின் போதனைகளை நடைமுறைப்படுத்தியும் கொரோனாத் தடுப்பு அறிவுரைகளை பின்பற்றியும் நாட்டையும் மக்களையும் குணப்படுத்துவதற்கு உறுதிகொள்வோம்.

இம்முறை வெசாக் பண்டிகை இலங்கை யர்களுக்கும், உலக மக்களுக்கும் நோய் நொடியில்லாத வாழ்க் கைக்கும் ஆன்மீக உயர்வுக்கும் காரணமாக அமையட்டும் எனப் பிரார்த்திக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## வெசாக் பண்டிகையை முன்னிட்டு மூன்று முத்திரைகள் வெளியீடு

(கொழும்பு)

இவ்வாண்டின் வெசாக் பண்டிகையை முன்னிட்டு, மூன்று நினைவு முத்திரைகள் நேற்று வெளியிடப்பட்டன.




பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையின் கீழ் அலரிமாளிகையில் குறித்த முத்திரைகள் வெளியிடப்பட்டன. 10, 15 மற்றும் 45 ரூபாய் பெறுமதியான முத்திரைகளே இவ்வாறு வெளியிடப்பட்டன.

இன்றும் நாளையும் இரு தினங்கள் வெசாக் தினங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டன.

இதேவேளை மே 4 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரையிலான காலப்பகுதி வெசாக் வாரமாக அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சூதாட்டத்தில் ஈடுபட்டு கைதான நகரசபைத் தவிசாளர் உட்பட எண்மர் பிணையில் விடுவிப்பு



(நாவலப்பிட்டி)

கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட நாவலப்பிட்டி நகரசபைத் தவிசாளர் உள்ளிட்ட 8 பேர் தலா ஒரு இலட்சம் ரூபாய் சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் நாவலப்பிட்டி நகரில் அமைந்துள்ள விடுதி ஒன்றில் சூதாட்டத்தில் ஈடுபட்டமைக்காக இவர்கள் கடந்த 30 ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில் இவர்கள் கடந்த முதலாம் திகதி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டமையைத் தொடர்ந்து நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் நேற்று இவர்களுக்குப் பிணை வழங்கப்பட்டது. (இ-7)

## செய்தியில் உண்மையில்லை

# ஜனாதிபதியிடம் உதவி கோரவில்லை

## தேசப்பிரிய தெரிவிப்பு



(கொழும்பு)

அயர்லாந்தில் பட்டப்பின் படிப்பை மேற்கொண்டு வந்த மகிந்த தேசப்பிரியவின் மகன் விதுர காசியப்ப தேசப்பிரிய இங்கிலாந்திலிருந்து இலங்கை வந்த விமானத்தில் நாடு திரும்பினார்.

இலங்கைக்கு வருகை தந்த அவர் கொரோனா தடுப்பு தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

அயர்லாந்தில் கல்வி கற்றுக் கொண்டிருந்த அவரை இலங்கைக்கு அழைத்து வருவதற்கு ஜனாதிபதியின் உதவியைப் பெற்றுக்கொண்டதாகவும், இந்தச் செயல் பாரபட்சம் என ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டது.

ஆனால் இந்தச் செய்தியில் எந்தவித உண்மையும் இல்லை என தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தனது முகநூலில் குறிப்பிட்டார். (இ-7)

## இலங்கையர்கள் நால்வருக்கு மாலைதீவில் கொரோனா!

(மாலே)

மாலைதீவில் நான்கு இலங்கையர்கள் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகினர்.

கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவர்களின் இரத்த மாதிரிகள் பெறப்பட்டு நடத்தப்பட்ட சோதனையில் கொரோனாத் தொற்று உறுதியானது. (இ-7)

## நாட்டில் இதுவரையான காலப்பகுதியில் 30 ஆயிரம் பி.சி.ஆர்.சோதனைகள்

(கொழும்பு)

நாட்டில் இதுவரையான காலப் பகுதியில் சுமார் 30, ஆயிரம் பி.சி.ஆர்.சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன என சுகாதார மேம்பாட்டுப் பணியகம் தெரிவித்துள்ளது.

அந்தவகையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மட்டும் 1,396 சோதனைகள் நடத்தப்பட்டன என்று சுகாதார மேம்பாட்டுப் பணியகம் தெரிவித்துள்ளது.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் புள்ளி விபரங்களின்படி, பெப்ரவரி 18 முதல் நேற்று வரை மொத்தம் 29,283 பி.சி.ஆர். சோதனைகள் நடத்தப்பட்டன.

அந்தவகையில் ஏப்ரல் 26 வரை தினமும் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சோதனைகள் நடத்தப்பட்டுள்ளதாகவும், ஏப்ரல் 27 அன்று அதிக எண்ணிக்கையிலான பி.சி.ஆர்.சோதனைகள் (1869) நடத்தப்பட்டதாகவும் புள்ளிவிபரங்கள் தெரிவித்துள்ளன. (ஜ)

## நளின் பண்டாரவின் வீட்டில் சட்டவிரோத மதுபான உற்பத்தி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டாரவிற்குச் சொந்தமான குளியாப்பிட்டிய பகுதியிலுள்ள வீடு ஒன்றில் சட்டவிரோத மதுபான உற்பத்தியில் ஈடுபட்ட நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.



குறித்த சம்பவம் தொடர்பில் நளின் பண்டாரவைத் தொடர்பு கொண்டு வினவியபோது குறித்த வீட்டினைப் புனரமைப்பதற்காக தாம் பிறிதொரு நபருக்கு வழங்கியிருந்ததாகவும், சட்டவிரோத மதுபான உற்பத்திக்கும் தனக்கும் எந்தவித தொடர்பும் இல்லை எனவும் கூறினார். (இ-7)

# இலங்கை அரசியலமைப்பும் 19 வது திருத்தம் சம்பந்தமான விமர்சனங்களும்

15

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் -எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தில் உள்ளடக்கப்பட்ட மாகாண சபை சட்டத்தின் கீழ் மாகாண சபைகள் நிறுவப்பட்டு தற்போது 30 வருடங்களுக்கும் மேலாகிறது. ஆனால் மாகாண சபை முறைமையில் வெற்றி, தோல்வி முறைப்பாடுகளோ, அவற்றை வலுவூட்டும் முறைமை தொடர்பிலோ 30 வருட காலமாக எந்தவொரு அரசாங்கமும் மீளாய்வு செய்யவில்லை.

அதனால் மாகாண சபைகளில் நாங்கள் எதிர்பார்த்த நோக்கங்கள் வெற்றியடைந்துள்ளதா? தோல்வியடைந்துள்ளதா? என்பதை கணக்கிட்டுக் கூற முடியாது. இன்று மாகாண சபைக்கு ஒதுக்கீடு செய்யும் நிதியானது 85 சதவீதம் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கும் 15 சதவீதம் அபிவிருத்திக்கும் ஒதுக்கப்படுகிறது. மாகாண சபைகளை கலைத்து ஒன்றரை வருடங்கள் கடந்துள்ள நிலையில் பல்லாயிரக்கணக்கான மாகாண சபை அதிகாரிகள் பொறுப்புகளோ வேலைகளோ இன்றி உள்ளனர். மாகாண சபை முறைமை தொடர்பில நாம் எமது கடமையை சரிவர நிறைவேற்றவில்லை. மீளாய்வு செய்து அது தொடர்பில் கண்டறிந்து மாகாண சபைகளை வலுவூட்டுவதற்கும் அதை சரியான பாதைக்குக் கொண்டு வருவதற்கும் முடியாமல் போயுள்ளது.

நான் இங்கு கருத்துத் தெரிவிப்பது சபாநாயகர் ஆகிய உங்களுக்கோ பிரதமருக்கோ இந்த சபையில் என்னை விமர்சிக்கின்றவர்களுக்கோ எதிராக அல்ல. நாம் ஏதாவது தவறு செய்கிறோம் என்றால் அதனை திருத்திக்கொள்ள வேண்டும். நாங்கள் வாகனத்தை செலுத்தும் போது வாகனம் சாலையை விட்டு விலகி தவறான வழியில் சென்றால் அது மின் கம்பத்தில் மோதுவதற்கு முன்னரே நாம் வாகனத்தை மீண்டும் சாலைக்குக் கொண்டு வர முயற்சிப்போம்.

கடந்த மூன்று வாரங்களுக்கு முன்னர் சுயாதீன ஆணைக்குழுக்கள் தொடர்பான பிரச்சினைகள் தொடர்பாக நான் முன்வைத்த கருத்துக்கள் தொடர்பில் பலர் தவறான முன்மொழிவுகளை முன்வைத்துள்ளனர். நான் சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு எதிராக பேசவில்லை. அரசியலமைப்பு சபையின் காலவரையறை போன்று சுயாதீன ஆணைக்குழுக்களுக்கும் காலவரையறை உண்டா? அது தொடர்பிலான விடயங்கள் என்ன? கொள்கைகள் என்ன? வழிகாட்டல்கள் என்ன? என்பதையே நான் கேட்டேன்.

அவ்வகையான எந்த விடயமும் சுயாதீன ஆணைக்குழுக்களிடம் இல்லை. நான் அன்று கூறியதையே இன்றும் கூறுகிறேன். மோசமான குற்றவாளிகள், போதைப்பொருள் கடத்தற்காரர்கள், பாதாள உலக கோஷ்டிகளின் தலைவர்கள் போன்றவர்களை வெலிக்கடை சிறைச்சாலையில் கட்டுப்படுத்த முடியாத காரணத்தினால் நீதியரசருடன் கலந்துரையாடி எடுக்கப்பட்ட முடிவுக்கமைய அவர்களை அக்குனுகொல பெலெஸ்ஸ சிறைச்சாலைக்குக் கொண்டு சென்றோம். அதன் பின்னர் போதைப்பொருள் கடத்தற்காரர்கள், பாரிய குற்றவாளிகள், பாதாள உலக கோஷ்டியினர், மனித உரிமை ஆணைக்குழு போன்ற தரப்புகளிடமிருந்து அதிரடிப்படை தலைவரிடம் பல கேள்விகள் கேட்டு பக்கம் பக்கமாக கடிதங்கள் அனுப்பி வருகின்றனர்.

அக்குனு கொலபெலெஸ்ஸ மாற்றுவதற்கு அனுமதியளித்தது யார்? குற்றவாளிகளுக்கு பாதுகாப்பு அளிக்க கூறியது யார்? யாரின் பணிப்புரைகளுக்கமைய நீங்கள் அங்கு சென்றீர்கள்? நீங்கள் எவ்வாறான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறீர்கள்? அந்த நடவடிக்கைகளுக்கான பொறுப்புகளை நீங்கள் ஏற்பீர்களா? ஆகிய கேள்விகளை அதிரடிப்படை தலைவரிடம் கேட்டு வருகின்றனர்.

மனித உரிமை ஆணைக்குழு, அமைச்சர் மங்கள சமரவீர போன்றவர்கள் பாதாள உலக கோஷ்டியினர், குற்றவாளிகள், போதைப்பொருள் கடத்தற்காரர்கள் ஆகியவர்களின் மனித உரிமைகளுக்காக முன்வருகிறீர்களா? நான் உரையாற்றியதன் பின்னர் மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டதை நான் கண்டேன். ஜனாதிபதி இவ்வாறான கருத்தொன்றை தெரிவித்திருக்கின்றார். எங்களுக்கு வேலை செய்வதற்கு மனமில்லை. பணியிலிருந்து இராஜினாமா செய்துவிட்டு செல்வதற்கு தோன்றுகின்றது எனத் தெரிவித்திருந்தார்.

நான் அவரிடம் என்ன கேட்கிறேன் என்றால் மனித உரிமை ஆணைக்குழு 21 மில்லியன் நாட்டு மக்களின் உரிமை களை பாதுகாக்கின்றதா? குற்றவாளிகளினதும் பாதாள உலக கோஷ்டிகளினதும் மனித உரிமைகளை பாது காக்கின்றதா? மனித உரிமை தொடர்பில் பெருமை பேசும் உலகின் பெரிய நாடுகளின் தலைவர்கள் தீவிரவாதிகளையோ போதைப்பொருள் கடத்தற்காரர்களையோ பாதாள உலக கோஷ்டியினரையோ கைது செய்ததன் பின்னர் மனித உரிமைகளுக்கு அனுகூலமாகவா செயற்படுகிறார்கள். அனைத்து மனித உரிமைகளையும் எம்மிடம் தான் திணிக்கிறார்கள்.

நீதிபதிகளை நியமிப்பது தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஆளுங்கட்சி அமைச்சர் ஒருவரும் எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் என்னை கடுமையாக விமர்சித்திருந்தனர்.

நான் நீதிபதிகளை நியமிப்பது தொடர்பில் குறை கூறியுள்ளேன் என்று அவர்கள் நினைத்துக் கொணடிருக்கிறார்கள். இதைத்தான் நான் முன்பும் தெரிவித்தேன். நான் கூறியது நியமிக்கப்பட்டவர்களையல்ல. எனது கேள்வி அரசியலமைப்பு நிராகரிக்கும் சிபாரிசுகளுக்கு என்ன நடக்கும்? அதற்கு பொறுப்புக் கூறுகின்றவர் யார் என்பதே ஆகும். அச்சபையினால் இதுவரை 14 நீதியரசர்களின் பெயர்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

அவற்றில் சிலரின் பெயர்களை நான் மூன்று முறை அரசியலமைப்பு சபைக்கு அனுப்பி வைத்திருக்கின்றேன். எதனால் அவர்கள் அப்படி அனுப்பி வைக்கின்றார்கள். காரணம் நீதியரசர்களால் அரசியல் யாப்பு சபைக்கு முன்னாள் ஆஜராக முடியாது. அவர்களால் பிரதம நீதியரசரை சந்திக்கவும் முடியாது. ஆகையால் அவர்களால் இலகுவாக பிடித்துக் கொள்ளக்கூடியவன் நான் ஒருவன் மாத்திரமே.

என்னை வீதியில் வைத்தாவது பிடித்துக்கொள்ள முடியும். அதனாலேயே அவர்கள் குறை கூறக்கூடிய இடத்தை நாடி வந்திருக்கின்றார்கள். அவர் களுக்கு அநீதி விளைவிக்கப்பட்டிருப்பதாக அவர்கள் கூறுகின்றார்கள். நீங்களே எம்மை கவனத்தில் கொள்ள வில்லை என அவர்கள் கூறுகின்றார்கள்.

அதாவது நானே அவர்களை வெட்டுகின்றேன் என்ற எண்ணம் முதலில் அவர்களுக்கு ஏற்பட்டிருந்தது. ஆனால் இப்போது அவர்களுக்கு அந்த எண்ணம் இல்லை. ஆகையால் மிகத் தெளிவாகவே நீதியரசர்களின் பெயர் அரசியலமைப்பு சபையினால் நிராகரிக்கப்படும் பட்சத்தில் அப்பதவியை வகிப்பவருக்கு தமது சேவைக்காலத்திற்கான பதவி உயர்வு தமக்கு அரசியலமைப்பு சபையினாலோ வேறொரு நிறுவனத்தினாலோ எதனால் சிபாரிசு செய்யவில்லை என்ற காரணத்தை அறிந்து கொள்வதற்கான உரிமை இருக்கின்றது.

சாதாரண ஒரு தொழிலாளியை எடுத்துக் கொணடாலும் கூட அவருக்கு தகைமை இருந்தும் பதவி உயர்வு கிடைக்காவிட்டால் எதனால் அப் பதவி உயர்வு வழங்கப்படவில்லை எனக் கேட்கும் உரிமை அவர்களுக்கு இருக்கின்றது. அப்படி பார்க்கும் பொழுது நீதியரசர் என்பவர் ஒரு சாதாரண ஆள் அல்ல. இவ்விடயத்தில் நீதவான் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், மேல் நீதிமன்றம் ஆகிய அனைத்து நீதிமன்றங்களிலும் கடமையாற்றும் மதிப்பிற்குரிய நீதிபதிகளின் எதிர்பார்ப்புகள் இன்று சிதைந்து போயிருக்கின்றன. ஆகையால் அவர்கள் எமக்கும் இதே கதி நேருமா எனக் கேட்கின்றார்கள்.

எமக்கும் பதவி உயர்வுகளைப் பெற்றுக்கொள்வதற்கு எவரின் பின்னாலாவது செல்ல நேரிடுமா? நாங்கள் கீழ் மட்டத்திலிருந்து நீதவான் நீதிமன்றிலிருந்து எமது பதவி உயர்வுகளுடன் எதிர்காலம் பற்றிய ஒரு எதிர்பார்ப்புடனேயே முன்னகர்ந்து செல்கின்றோம். அதற்காக நாம் பெரும் பாடுபட்டு உழைக்கின்றோம். ஆகையால் இவ்வாறு பெயர்களை நிராகரிக்கப்படுபவர்களுக்கு அவ்வாறு அவர்கள் எதனால் நிராகரிக்கப்படுகின்றார்கள் என்ற விடயத்தை தெரிந்து கொள்வதற்கான மிகத் தெளிவான உரிமை இருக்கின்றது.

சபாநாயகரே, நான் அறிந்த வரைக்கும் நான் இப்போது கூறுவது 2015 ஏப்ரல் 27 ஆம் திகதி 19 ஆவது சீர்திருத்தம் அங்கீகரிக்கப்பட்ட போது கரு ஜெயசூரிய ஒரு அமைச்சர் என்ற வகையில் இந்த அவையில் ஆற்றிய உரையின் ஒரு பகுதியை அப்போதைய சபாநாயகர் சமல் ராஜபக்ஷ அப்போது நீங்கள் பொது நிர்வாக, உள்ளூராட்சி, ஜனநாயக நிர்வாகம் பற்றிய மற்றும் புத்தசாசன அமைச்சராக இருந்தீர்கள். 19 ஆவது சீர்திருத்தம் பற்றிய விவாதத்தில் கலந்து கொண்ட நீங்கள் இவ்வாறு கூறுகின்றீர்கள்.

கடந்த ஜனாதிபதித்தேர்தலின் போது மைத்திரி சிந்தனை எனும் எமது கொள்கைத் திட்டத்தினை எடுத்துக்கொண்டு சந்தி சந்தியாக சென்று நாம் மக்களிடம் வாக்கு கேட்டமை இத்தருணத்தில் எனக்கு ஞாபகம் வருகின்றது. எமக்கு நூறு நாட்களை தாருங்கள்.

அந்த நூறு நாட்களுக்குள் நீதியை மதிக்கின்ற நியாயமான ஒரு சமூகத்தை உருவாக்கி இந்த நாட்டை அரசியல் மயப்படு வதிலிருந்து மீட்டெடுப்போம் என நாம் கூறினோம். அடுத்தபடியாக அவ்விவாதத்தில் நீங்கள் அரசியல்மயமான ஒரு சமூகத்தை, அரசியல் மயமான ஒரு அரச சேவையை, அரசியல் மயமான ஒரு காவல் துறையை, அரசியல் மயமான ஒரு நீதித்துறையை தூய்மைப்படுத்த வேண்டுமாயின் எமக்கு சமூகத்தில் மதிப்பிற்குரியவர்கள் தேவைப்படுகின்றார்கள். இன்று நாம் அதையே எதிர்பார்க்கின்றோம். நாம் பொதுமக்களிடமும் அதையே கூறினோம். சபாநாயகரே, பிரதமரே, எதிர்க்கட்சி தலைவரே அப்படியான புகழ்பெற்ற நபர்கள் இவ்விடத்தில் இருப்பதே வரவேற்கத்தக்கதென நான் நினைக்கின்றேன். நாம் ஏதேனும் ஒரு வகையில் அவ்விடத்திலிருந்து புகழ் பெற்றவர்களை ஒதுக்கிவிட வேண்டும் என எதிர்பார்க் கின்றோமாயின் ஆணைக்குழுக்களில் அரசியல்வா திகளை மாத்திரம் நியமிக்க விருப்பம் கொண்டிருப்பின் சபாநாயகர் இச்சட்டமூலத்தைப் பற்றி கதைப்பதில் எவ்வித பிரயோசனமும் இல்லை. இதைக் கொண்டு வருவதில் எந்த பிரயோசனமும் இல்லை. அது அப்படி நடக்குமாயின் எமது குறிக்கோள் நிறைவேறியதாக நாம் கருதப் போவதில்லை. சபாநாயகரே நீங்களே அப்படி கூறுகின்றீர்கள். அவ்வாறு நீதித்துறையும் காவல் துறையும் அரச துறையும் சமூகமும் அரசியல் மயமானதாக அன்று நீங்கள் தெரிவித்தது போன்று அரசியலமைப்பு சபை அரசியல் மயமாகியிருப்பதாக நீதிபதிகள், கல்விமான்கள், புத்திஜீவிகள், பக்கச்சார்பற்ற நடுநிலை கொண்டவர்கள் குற்றஞ் சாட்டுகின்றனர்.

சபாநாயகரே! வேலியே பயிரை மேய்ந்தால் யாரிடம் முறையிடுவது என்ற கதை உள்ளது. கடந்த தினங்களில் நீதிபதிகளை நியமிப்பது தொடர்பில் நீங்கள் எனக்கொரு கடிதம் அனுப்பி வைத்திருந்தீர்கள். 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ஆம் திகதி நீங்கள் அனுப்பிய கடிதத்தில் ஒரு நபரை தேர்ந்தெடுக்கும் போது அவரின் சேவை மூப்பை மாத்திரம் ஒருபோதும் கவனத்திற்கொள்ள மாட்டோம். சட்டம் மற்றும் நீதிமன்ற சேவையில் அவர் பெற்றிருக்கும் திறமை, நிபுணத்துவம், வினைத்திறன், சுயாதீனத்தன்மை மற்றும் நேர்மை போன்றவற்றையே நாம் கருத்திற்கொள்வோம்.

மேலும் இலஞ்சம் வாங்கியவர்கள், திறமையற்றவர்கள், இலஞ்ச குற்றச்சாட்டுக்கு உள்ளான நபர்கள், சுயாதீனமாக செயற்படவில்லை என்று ஆதாரபூர்வமாக குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் ஆகியவர்கள் சபையினால் கடந்த காலங்களில் நிராகரிக்கப்பட்டுள்ளனர். நிராகரிக்கப்பட்டவர்களை தான் நீங்கள் இங்கு குறிப்பிட்டுள்ளீர்கள். இங்கு பிரச்சினை என்று நான் கருதுவது என்னவென்றால் இது உங்களதும் எனதும் பொறுப்பு மாத்திரமல்ல, பிரதம நீதியரசின் பொறுப்பும் இதில் உள்ளடங்கியுள்ளது. நீதிபதி ஒருவரை நியமிப்பதற்கு பிரதம நீதியரசருக்கும் கடமை உள்ளது.

நான் அறிந்த வகையில் நீதிபதி ஒருவர் பதவி உயர்வுக்கு தகுதியானவர் இல்லையென்றால் அவர் அந்த பதவி உயர்வுக்கு தகுதியற்றவர் என்று அவருக்கே அறிவியுங் கள். ஒழுக்காற்று விசாரணையா, இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பிலான பிரச்சினையா, கடமையாற்றுவதில் தவறுகளா, இல்லையென்றால் வேறேதும் விடயமா என்பதை அவருக்கு தெரிவிக்க வேண்டும். இப்போது 14 பேர் ஏன் என் பின்னால் வருகிறார்கள்? அவர்களில் அரைவாசிக்கும் மேலானவர்கள் தற்போது ஓய்வு பெற்றுள்ளார்கள்.

அவர்கள் பதவி உயர்வை பெற்றிருந்தால் 65 வயது வரை கடமையாற்றியிருக்கலாம் என்றும் 60 வயதில் அவர்களுக்கு சேவையிலிருந்து ஓய்வுபெற நேர்ந்ததாகவும் கூறுகிறார்கள். அவர்களுக்கு பதவியுயர்வு வழங்கியிருந்தால் 65 வயது வரை கடமையாற்றிருக்கலாம் என்றும் ஏன் பதவி உயர்வு வழங்கவில்லை என்றும் கேள்வி எழுப்புகிறார்கள்.

அவர்களின் பிள் ளைகள் அவர்கள் என்ன குற்றஞ் செய் தார்கள் என்று கேள்வி எழுப்புகிறார்கள். அப்படியென்றால் இது தொடர்பாக ஏன் இன்னும் பதிலளிக்கவில்லை.

அத்துடன் 2019 ஆம் ஆண்டு ஜனவரி 2 ஆம் திகதி நீங்கள் அனுப்பிய கடிதத்தில் மற்றுமொரு விடயத்தை குறிப்பிட்டுள்ளீர்கள்.

தகுதியான நபர்களைத் தேர்ந் தெடுக்கும் போது நியாயமானதும் வெளிப்படையான துமான நடைமுறைகளை பின்பற்றி சபையின் அனைத்து உறுப்பினர்களுக்கும் அச்சுறுத்தல்களின்றி முடிவுகளை எடுப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குவதாகவும் அனைத்து கருத்துக்களையும் ஆராய்ந்து பக்கச்சார்பற்ற இறுதி முடிவொன்றுக்கு வழங்கி வருவதாகவும் குறிப்பிட்டு இருந்தீர்கள்.

(தொடரும்....)

# ரூ.5 ஆயிரம் வழங்கப்படாததால் போராட்டத்தில் குதித்த மக்கள்

## ஜனாதிபதியிடம் நீதி வழங்கக் கோரிக்கை





(பத்தனை)

பத்தனை, கிறேகிலி தோட்டத்தில் வாழும் மக்கள் நேற்று முன்தினம் மதியம் தோட்டத் தொழிற்சாலைக்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அரசாங்கத்தால் வழங்கப்படும் 5000 ரூபாய் கொடுப்பனவு தமக்கு வழங்கப்படவில்லை என்றும், பக்கச்சார்பான முறையிலேயே பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்பட்டதாகவும் மக்கள் குற்றம்சாட்டினர்.

எனவே, இவ் விடயம் தொடர்பில் உரிய கவனம் செலுத்தி தமக்கு நீதியை வழங்குமாறு ஜனாதிபதியிடம் மக்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

கொரோனா வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்தி மக்களைக் பாதுகாப்பதற்காக அரசாங்கத்தால் தொடர் ஊடரங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது. இதனால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட, நாளாந்த வருமானத்தை இழந்தவர்களுக்கு 5000 ரூபாய் கொடுப்பனவை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. சமுர்த்திப் பயனாளிகள், முதியோர் கொடுப்பனவு பெறுபவர்கள், அங்கவீனர்களுக்கான கொடுப்பனவை பெறுபவர்களுக்கும் இக்கொடுப்பனவு வழங்கப்பட்டது.

இந்நிலையில் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் அனைவருக்கும் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படும் என்றும், நாள் கூலியை இழந்தவர்களும் இதனைப் பெறுவதற்கு தகுதியுடையவர்கள் என அறிவிக்கப்பட்டது.

எனினும், தமது தோட்டத்தில் வாழும் மக்களுக்கு உரிய வகையில் கொடுப்பனவு கிடைக்கப்பெறவில்லை. விதவைப்பெண்கள் கூட புறக்கணிக்கப்பட்டுள்ளனர். கட்சி, தொழிற்சங்க அடிப்படையிலேயே ஒரு சிலருக்கு வழங்கப்பட்டது. இதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

மக்களின் வரிப்பணத்தில் சம்பளம் பெறும் அரச அதிகாரிகள்கூட மனிதநேயமற்ற விதத்தில் செயற்படுகின்றனர் எனவும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் உள்ளக்குமுறல்களை வெளிப்படுத்தினர்.

அதேவேளை, தோட்டத்தில் உரிய வகையில் வேலை வழங்கப்படுவதில்லை. 18 கிலோ கொழுந்து பறிக்காவிட்டால் அரை நாள் கூலியே போடப்படுகின்றது. 750 ரூபாய் சம்பளத்தை வைத்துக்கொண்டு வாழ்க்கையை முன்னெடுக்க முடியாது. எனவே, 5000 ரூபாய் வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்தனர். (இ-7)

# கொரோனாத் தொற்று தொடர்பில் இராணுவம் ஆராய்வு-தளபதி தகவல்

(கொழும்பு)

கொழும்பு 15, மோதரைப் பகுதியில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்த பெண்ணுக்கு எவ்வாறு கொரோனாத் தொற்று ஏற்பட்டது என்பது தொடர்பில் இதுவரை கண்டறியப்படவில்லையெனத் தெரிவித்த இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா அது குறித்து தொடர்ந்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

கொரோனாத் தொற்றுக்கு இலக்காகி நேற்றுமுன்தினம் உயிரிழந்த பெண்ணுக்கு தொற்று எவ்வாறு ஏற்பட்டது , யாரால் தொற்றுக்குள்ளானார் என்பது பற்றி இதுவரை கண்டறியப்படவில்லை. எப்படியாயினும் அதனை ஆராய்ந்து கண்டறிவோம் என இராணுவத் தளபதி தெரிவித்தார்.

இதேவேளை, கொரோனாத் தொற்றுக்குள்ளான 20 பேரில் 15 பேர் இலங்கைக் கடற்படையினர் எனவும் அவர் தெரிவித்தார். அதேவேளை, இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனா தொற்றாளர்கள் 771 பேரில் 348 பேர் கடற்படையினர் ஆவர்.

இதேவேளை, கொழும்பு 15, முகத்துவாரம் பொலிஸ் பிரிவின் மெத்சந்த செவன தொடர் மாடிக் குடியிருப்பைச் சேர்ந்த 52 வயது பெண் ஒருவர் அங்கொடை தொற்று நோய் தடுப்பு வைத்திய சாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

முகத்துவாரம் - மெத் சந்த செவன தொடர்மாடி குடியிருப்பில் வசிக்கும் 5 பிள்ளைகளின் தாயொருவர், மூச்சுத் திணறல் காரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதன்போது அங்கு அவருக்கு பி.சி.ஆர். எனும்கொரோனா வைரஸ் தொற்றைக் கண்டறியும் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது, அவருக்கு கொரோனா இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ள நிலையில், உடனடியாக அங்கொடை தொற்று நோய் தடுப்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அப்போதும் குறித்த பெண்ணின் நிலை தீவிரமாக இருந்துள்ள நிலையில், உடனடியாகவே தொற்று நோய் தடுப்பு வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அவருக்கு சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில், நேற்று முன்தினம் காலை குறித்த பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## fb (f)ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... 2032 facebook

**கபிலா**



எனக்கு ஒரு ஜோசியக்காரர் சொல்லியிருந்தார் 2020 ராஜயோகம் வரும், வீட்ல உட்கார்ந்தே சாப்பிடுவீங்கன்னு! அப்ப தெரியல இப்ப தெரியுது...

**மாறன்**



இந்த சைனாக்காரன் டச் போன், டச் ஐ பாட், டச் டிவி, டச் கதவு, டச் கார், டச் பைக் எல்லாத்தையும் டச் டச்சா கண்டுபிடிச்சான்... கடைசியில கொரோனா வைரஸையும் டச் பண்ணா வாற மாதிரிப் பண்ணிட்டான்

**வெற்றி**



வட்ஸ் அப்பில் குட் மோர்னிங் அனுப்புறவங்களுக்கு ஒரு வேண்டுகோள்... குட் மோர்னிங் மெசேஜ் அனுப்பும் போது இன்னிக்கு என்ன நாள், என்ன கிழமைன்னு கூட கொஞ்சம் அனுப்புங்க புண்ணியமா போகும்

**விஷ்ணு**



சீட்டாட்டத்தால பல குடும்பங்கள் தெருவுக்கு வந்த காலம் போய்... இப்ப தெருவுக்கு வரக்கூடாதுன்னு பல குடும்பங்கள் வீட்டில சீட்டாடுது

**ராஜேஷ்**



விழித்து இருக்கிறியா, விலகி இருக்கிறியா, வீட்டிலேயே இருக்கிறியான்னு அடிக்கடி கேட்குறீங்க... ஆனா சந்தோசமா இருக்கிறியா, நிம்மதியா இருக்கிறியா, பத்திரமா இருக்கிறாயா ன்னு யாரும் கேட்கமாட்ரீங்களே... என்னா அடி அடிக்கிறாய்யா இவ

**சுமிதா**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# 50 ஆண்டுகளில் அதீத வெப்பநிலை கோடிக்கணக்கில் மக்கள் பாதிப்படையும் அபாயம்

## ஆய்வில் அதிர்ச்சித் தகவல்



(ஜெனிவா)

300 கோடிக்கும் அதிகமானோர் 2070ஆம் ஆண்டில் "தாங்கிக் கொள்ள முடியாத" வெப்பநிலையில் வாழ்வதற்கான சூழல் ஏற்படும் என புதிய ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது.

பசுங்குடில் வாயுக்களின் வெளியேற்றம் குறையாவிட்டால் பலர் சராசரியாக 29 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் வாழ நேரிடும் என அந்த ஆய்வு தெரிவித்துள்ளது.

6000 ஆண்டுகாலமாக மனிதர்களுக்கு பழகிவந்த ஒரு பருவநிலை சூழல் அடியோடு மாறும் என்பதையே இது காட்டுகிறது.

இந்தியா, ஆபிரிக்கா, தென் அமெரிக்கா, மத்திய கிழக்கின் சில பகுதிகள், அவுஸ்திரேலியாவின் வடக்குப் பகுதி ஆகிய பகுதிகள் பாதிக்கப்படும் என இந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஏழை நாடுகளில் இந்த வெப்பநிலையை சமாளிக்க பலரால் முடியாத சூழல் ஏற்படும் என இந்த ஆய்வு கவலை தெரிவித்துள்ளது.

பருவநிலை மாற்றத்தை அதிகரிக்கும் சூழல்களை கட்டுப்படுத்துவதே இம்மாதிரியான அதிக வெப்பநிலை ஏற்படாமல் தடுப்பதற்கான வழி என இந்த ஆய்வின் முடிவுகள் தெரிவித்துள்ளன.

பருவநிலை நிபுணரான லெண்டன் என்பவர் சீனா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவிலுள்ள விஞ்ஞானிகளுடன் சேர்ந்து நடத்திய ஆய்வில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-2)

# கொரோனா நிவாரணப் பொருட்களை ஏற்றிச் சென்ற விமானம் விபத்து

## அறுவர் உயிரிழப்பு

(மொகாதிஷு)

சோமாலியாவில் கொரோனா வைரஸ் நிவாரணப் பொருட்கள் மற்றும் மருந்துகளை ஏற்றிச் சென்ற விமானம் விபத்துக்குள்ளானதில், 6 பேர் உயிரிழந்துள்ளதாக சோமாலியா அரசாங்கம் தெரிவித்துள்ளது.

'ஆப்ரிக்கன் எயார்லைன்ஸ்' நிறுவனத்துக்குச் சொந்தமான இ.எம்.பி- 120 (EMB-120) என்ற விமானமே கடந்த திங்கட்கிழமை மாலை இவ்வாறு விபத்துக்குள்ளானது.

தலைநகர் மொகாதிஷுவில் இருந்து பார்தேல் நகருக்குச் சென்ற குறித்த விமானம், பார்தேல் விமான நிலையத்துக்கு சற்று தொலைவில் விபத்துக்குஉள்ளானதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

விமானி, துணை விமானி, விமான பொறியாளர் மற்றும் ஒரு பயிற்சி விமானி, அதே போல் விமான நிறுவனத்தில் பணிபுரியும் இரண்டு பேரும் இந்த விபத்தில் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு போக்குவரத்து அமைச்சர் தெரிவித்தார். அத்துடன், இதற்கான விசாரணைக்கு குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும், சர்வதேச உதவியை வரவேற்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்கள் சோமாலியா மற்றும் கென்யா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

எனினும் இந்த விபத்து எவ்வாறு நிகழ்ந்தது என்பதற்கான தெளிவான தகவல்கள் இல்லை என அரச செய்தி நிறுவனம் தெரிவித்தது. (ஜ-2)

# சீனாவில் கல்வி நடவடிக்கைகள் மீள ஆரம்பம்

(பீஜிங்)

கொரோனா வைரஸ் பரவலைத் தொடர்ந்து சீனாவின் ஹூபே மாகாணத்தில் பாடசாலைகள் நேற்று மீள ஆரம்பிக்கப்பட்டது. ஹூபே மாகாணத்திலுள்ள தரம்12,தரம்9ஆகிய வகுப்புக்களுக்கான பரீட்சைகள் இடம்பெறவுள்ளதால் இவற்றுக்கான கல்வி நடவடிக்கைகளே முதலாவதாக ஆரம்பிக்கப்பட்டது.

சீனாவின் ஏனைய பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் தரம் 12 இற்கான கல்வி நடவடிக்கைகள் கடந்த மார்ச் மாதமே ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கொரோனாத் தொற்று ஆரம்பமான ஹூபே மாகாணத்தைச் சேர்ந்த தரம் 9,12 மாணவர்கள் அனைவரும் கொரோனா தொற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என உத்தரவிடப்பட்டது.

அத்துடன் பாடசாலைகளில் சமூக இடைவெளி கட்டாயமாக பேணப் படவேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டது. (ஜ-2-8)

# இந்தியர்களை தாய்நாட்டிற்கு அழைத்து வர நடவடிக்கை



(கொச்சி)

இந்தியர்களை மீட்டு அழைத்து வருவதற்காக மாலைதீவு, டுபாய்க்கு இந்தியக் கடற்படை கப்பல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கொரோனா பாதிப்பின் காரணமாக ஐக்கிய அரபு அமீரகம், அமெரிக்கா, மாலைதீவு உள்ளிட்ட நாடுகளில் சிக்கியுள்ள இந்தியர்களை மீட்டு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு ஆரம்பித்துள்ளது. இந்த பணி இன்று ஆரம்பிக்கும் என்று அறிவித்துள்ள அரசு, இதற்காக பல்வேறு விதிமுறைகளையும் அறிவித்துள்ளது.

தாய்நாடு திரும்புவதற்காக வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்கள் அங்குள்ள இந்திய தூதரகங்களில் தங்கள் பெயர்களை பதிவு செய்து வருகிறார்கள். பரிசோதனைக்கு பின்னர் கொரோனா அறிகுறி இல்லாதவர்கள் மட்டும் அழைத்து வரப்பட உள்ளனர்.

மாலைதீவில் உள்ள இந்தியர்களை திரும்ப அழைத்து வருவதற்காக மும்பையில் இருந்து இந்திய கடற்படைக்கு சொந்தமான ஐ.என்.எஸ்.ஜலஷ்வா, ஐ.என்.எஸ்.மாகர் என்ற இரு கப்பல்கள் அந்த நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதேபோல் ஐ.என். எஸ்.ஷர்துல் என்ற கப்பல் டுபாய்க்கு விரைந்துள்ளது.

இந்தக் கப்பல்கள் அந்த நாடுகளில் இருந்து இந்தியர்களை ஏற்றிக்கொண்டு கேரள மாநிலம் கொச்சி துறைமுகம் வந்து சேரும் என்று கொச்சியில் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேபோல் அபுதாபியில் இருந்து ஒரு விமானமும், டுபாயில் இருந்து ஒரு விமானமும் இந்தியர்களை ஏற்றிக் கொண்டு இந்தியா வர இருப்பதாக அங்குள்ள இந்திய தூதரகங்கள் தெரிவித்துள்ளன. (ஜ-2)

# உலகில் மிகவும் பாதுகாப்பான நாடு; அந்தஸ்தைப் பெற்றது நியூசிலாந்து

## ஊரடங்கு தளர்த்தப்பட்ட பின்பும் தொற்றுப் பதிவாகவில்லை

(வெலிங்டன்)

நியூசிலாந்தில் தொடர்ச்சியாக இரண்டாவது நாளாகவும் கொரோனா வைரஸ் தொற்றால் யாரும் பாதிக்கப்படவில்லை என அந்நாட்டு சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

மார்ச் நடுப்பகுதியில் கொரோனா வைரஸ் பரவியதில் இருந்து நாடு பூஜ்ஜிய தொற்றை பதிவு செய்த இரண்டாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

நியூஸிலாந்து சமூக பரவலை முற்றிலும் தடுப்பதில் வெற்றி கண்டுள்ளதாக, நியூசிலாந்து பிரதமர் ஜெசிந்தா ஆர்டெர்ன் அண்மையில் அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, நியூசிலாந்தில் நடைமுறையில் இருந்த இறுக்கமான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை எளிதாக்கப்பட்டது. இதன் ஊடாக, உலகிலேயே மிக பாதுகாப்பான நாடு என்ற அந்தஸ்தை நியூசிலாந்து பெற்றுள்ளது.

நியூசிலாந்தில் இதுவரை கொரோனா வைரஸ் தொற்றால் 1487பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் 1276பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 20பேர் உயிரிழந்துள்ளனர். 291 பேர் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# வடகொரிய ஜனாதிபதிக்கு நினைவுப்பதக்கம் வழங்கிக் கௌரவித்த ரஷ்ய ஜனாதிபதி



(பியாங்யாங்)

இரண்டாம் உலகப் போரில் நாஜி ஜேர்மனிக்கு எதிரான வெற்றியின் 75 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னுக்கு, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் நினைவுப் பதக்கமொன்றை வழங்கினார். வட கொரிய பிராந்தியத்தில் இறந்த சோவியத் வீரர்களின் நினைவைப் பாதுகாப்பதில் அவர் வகித்த பங்கிற்காக இந்தப் பதக்கம் வடகொரிய ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டதாக பியாங்யாங்கில் உள்ள ரஷ்ய தூதரகம் தெரிவித்துள்ளது.

பதக்கம் வழங்கும் நிகழ்வில், வடகொரியாவுக்கான ரஷ்யத் தூதர் அலெக்சாண்டர் மட்ஸ்கோரா, இந்த விருதை வடகொரிய வெளியுறவுத்துறை அமைச்சர் ரி சன் வான்னுக்கு வழங்கினார். இந்த நிகழ்வில், ரஷ்ய மற்றும் வடகொரிய அதிகாரிகள் முகமூடி அணிந்திருப்பதைக் காட்டும் புகைப்படங்கள் தற்போது வெளியாகியுள்ளன.

இந்த விருதைப் பெற வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங், வருவதாக முன்பு தெரிவிக்கப்பட்ட நிலையில், பல்வேறு காரணங்களால் அவர் வரவில்லை. தற்போது உலகையே அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் தொற்று முக்கிய காரணமாக பார்க்கப்படுகின்றது.

கடந்த 1941 ஆம் ஆண்டு முதல் 1945 ஆம் ஆண்டு வரை நடந்த 'கிரேட் பேர்ட்டியாட்டிக் வோர்' எனும் போரில் அடைந்த வெற்றியின் நினைவாக ஒவ்வொரு ஆண்டும் மே 9 ஆம் திகதி தலைநகர் மொஸ்கோவின் செஞ்சதுக்கத்தில் மிகப்பெரிய இராணுவ அணிவகுப்பை ரஷ்ய அரசு நடத்தும்.

ஆனால் இம்முறை கொரோனா வைரஸ் பரவல் காரணமாக இந்த ஆண்டு அணிவகுப்பை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் இரத்து செய்தார்.

கடந்த 2015ஆம் ஆண்டு செஞ்சதுக்கத்தில் நடந்த அணிவகுப்பை காண வடகொரிய ஜனாதிபதி கிம் ரஷ்யாவுக்கு செல்வதாக இருந்தது. ஆனால், இறுதித் தருணத்தில் உள்நாட்டு விவகாரங்களை மேற்கோள் காட்டி அந்தப் பயணத்தை அவர் ரத்து செய்தார். 70 ஆவது ஆண்டு விழாவிற்கு இதேபோன்ற அழைப்பை 2015 ஆம் ஆண்டு வடகொரிய ஜனாதிபதி நிராகரித்தார்.

இந்தப் போரின்போது, வடகொரியாவில் 1,375 சோவியத் வீரர்கள் கொல்லப்பட்டனர். அவர்கள் நினைவிடம் டி.பி.ஆர்.கே. எனும் இடத்தில் எழுப்பப்பட்டுள்ளது. சோவியத் வீரர்கள் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் புதைக்கப்பட்ட அந்த நினைவிடத்தை இன்னும் வடகொரியா பாதுகாத்துப் பராமரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# கொரோனாவைப் பயன்படுத்தி தேர்தலில் வெற்றிபெற முயற்சி

## அரச தரப்பு மீது சுஜீவ சாடல்



(கொழும்பு)

பயங்கரவாதி சஹ்ரானை பயன்படுத்தி ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றவர்கள் கொரோனா வைரஸைப் பயன்படுத்தி பொதுத்தேர்தலை வெற்றி கொள்ள முயற்சித்து வருகின்றனர் எனத் தெரிவித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க, இனவாதத்தை முன்னிலைப்படுத்தி தேர்தலை வெற்றி கொள்ளும் அரசாங்கத் தரப்பினர் சிறுபான்மை உறுப்பினர்கள் தம்முடன் இணைந்தால் நல்லவர்கள் எனவும் வேறு கட்சிகளுடன் இணைந்தால் தேசத் துரோகிகள் எனவும் முத்திரைகுத்தி வருவதாகவும் சாடினார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அலரிமாளிகையில் இடம்பெற்ற சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணைந்து கொண்டமையால், அரச தரப்பினர் அவர்களின் புகழைப்பாட ஆரம்பித்துள்ளனர்.

இவர்கள் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டிருக்காவிட்டால், இவர்களை பயங்கரவாதிகள் என்றும் தேசத் துரோகிகள் என்றும் விழித்திருப்பார்கள். இனவாதத்தைக் கக்கும் இவர்கள் ஹிஸ்புல்லா, ஹக்கீம் ஆகியோர் இவர்களுடன் இணைந்தால் அவர்கள் சிறந்தவர்களாக காண்பிப்பார்கள்.

நிசாத் பதியுதீன் கடந்தகாலத்தில் இவர்களுடன் இணைந்திருந்த போது அவர் பயங்கரவாதி கிடையாது. இந்தச் சிறுபான்மை உறுப்பினர்கள் இவர்களுடன் இல்லாது ஏனைய கட்சிகளுடன் இணைந்து செயற்பட்டால் அவர்களை தேசத் துரோகிகளாகவே அரச தரப்பினர் காண்பித்து வருகின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் அரவணைப்பில் இருக்கின்றமையை அனைவரும் அறிவார்கள். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை துரோகி என்றவர்கள் தற்போது அவருடன் இணைந்து செயற்படுகின்றனர்.

கடந்த அரசாங்கத்தின் போது எம்மீதும் பாரிய விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால் எமக்கு வழங்கப்பட்ட அமைச்சுப் பொறுப்புக்களில் நாங்கள் எந்த வித ஊழலையும் செய்யவில்லை. நியாயமான முறையில் செயற்படவே எப்போதும் முயற்சித்துள்ளோம்.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்தபோது எம்மீது விமர்சனங்கள் எழுந்ததை அடுத்தே சஜித் பிரேமதாஸவின் தலைமைத்துவத்தில் நாங்கள் பிரிந்து வந்துள்ளோம்.

எந்தவித குற்றச்சாட்டுக்களும் அற்றவர்கள் அனைவரும் சஜித்தின் தலைமைத்துவத்தில் ஒன்று கூடி மோசடிகள் அற்ற நல்லாட்சியை மேற்கொள்ள எதிர்பார்த்திருக்கின்றோம். மக்களுக்கு எம்மீது நம்பிக்கை இல்லாவிட்டால் அடுத்த பொதுத் தேர்தலில் எம்மைத் தாராளமாக நிராகரிக்கலாம். மக்களே! சிறந்த தலைவர்களைத் தெரிவு செய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கொரோனாத் தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கையை மறைக்க வேண்டிய தேவை அரசிற்குக் கிடையாது-வீரகுமார விளக்கம்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கையை மறைக்க வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு கிடையாது. சுகாதார பாதுகாப்புத் தரப்பினரது கண்காணிப்புக்கு அமையவே அரசாங்கம் தற்போது செயற்படுகின்றது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வீரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கொவிட்-19 வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கையை அரசாங்கம் மறைப்பதாக எதிர்த்தரப்பினர் குற்றம் சாட்டுகிறார்கள்.

வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கையைக் குறைத்து அறிவிக்க வேண்டும் என்ற அவசியம் அரசாங்கத்திற்கு கிடையாது.



சுகாதார பாதுகாப்புத் தரப்பினரது ஆலோசனைக்கு அமையவே அரசாங்கம் தற்போது செயற்படுகின்றது என மேலும் தெரிவித்தார். (இ-7)

# விபத்தில் சிக்கிய 6 வயதுச்சிறுவன் பலி!

## தாய், தந்தை, சகோதரி படுகாயம்



(ஏறாவூர்)

மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள சின்னப் புல்லுமலை பிரதேசத்தில் மோட்டார் சைக்கிள்கள் இரண்டு நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில், ஆறு வயதுச் சிறுவனொருவன் உயிரிழந்ததுடன் 3 பேர் படுகாயமடைந்த சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் இடம்பெற்றதாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

நொச்சிமுனை தரிசனம் வீதியைச் சேர்ந்த ஆறு வயது றொபட் டினேஷ் ஹனபன் ஹெறாசேயா என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தான்.

புல்லுமலை பிரதேசத்திலுள்ள கிறிஸ்தவ சபை ஒன்றை நடத்தி வரும் போதகர், அவர் மனைவி, 2 வயது பெண்பிள்ளை, உயிரிழந்த சிறுவன் ஆகியோர் சம்பவ தினமான நேற்று முன்தினம் காலை குறித்த சபைக்கு மோட்டார் சைக்கிளில் சென்று பிற்பகல் 1.30 மணியளவில் வீடு நோக்கி திரும்பிக் கொண்டிருந்தபோது, சின்ன புல்லுமலை பிரதேசத்தில் வாகனம் ஒன்றை முந்திச் செல்ல முற்பட்ட போது எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானதில் சம்பவ இடத்தில் ஆறு வயதுச் சிறுவன் உயிரிழந்ததுடன், 3 பேர் படுகாயமடைந்த நிலையில் மட்டு. போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதில் மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்த ஒருவரை பொலிஸார் கைது செய்ததுடன் உயிரிழந்த சிறுவனின் சடலம் வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## உயர்ந்த நோக்கம்!

நண்பர் ஒருத்தர் நடந்து போய்க் கொண்டிருந்தார் . நானும் அவர் கூட போய்க் கொண்டிருந்தேன்.அவருடைய நடையிருக்கே... நிமிர்ந்த நன்னடை! நேர் கொண்ட பார்வை! குதிரை மாதிரி போய்க் கொண்டிருந்தார்!''எப்பவுமே நீங்கள் இப்படித் தானா சேர்'' அப்படி என்றேன்.

" உயர்ந்த நோக்கத்தை நாடிச் செல்லக் கூடிய ஒரு மனிதன் பந்த பாசத்திற்கு அடிமைப்பட்டு அல்லது வேறு காரணத்திற் காகவும் தான் போய்க் கொண்டிருக்கின்ற நோக்கத்தை மறந்து, பின்னாலே தான் நடந்து வந்த பாதையை திரும்பிப் பார்க்க முற்பட்டார்.அவனுடைய முன்னேற்றம் தடைப்படும்.அவனுடைய எண்ணமும் ஈடேறாமல் போய்விடும்!'' அப்படி என்று ஒரு விளக்கம் கொடுத்தார் அவர். இது என்ன சேர் விளக்கம் என்றேன்." பகவத் கீதை விளக்கம்'' என்றார். அத்தோடு விடவில்லை. அதற்கான கதையையும் சொன்னார்.நானும் கேட்டுக் கொண்டேன் அவருடன் நடந்து போனேன்.அவர் சொன்ன கதை இது தான்.

பாரத யுத்தம் முடிந்தது.பலராமனும் கிருஷ்ணனும் இந்தப் பூ உலகத்தை விட்டு பரலோகத்தை அடைந்து விட்டார்கள். அர்ச்சுனன் ஒரு மாதிரியாக ஆகிவிட்டான்.அவன் அதுவரைக்கும் கற்று வைத்திருந்த அஸ்திர சாஸ்திரத்தையெல்லாம் மறந்தே போய் விட்டான்.வியாச பகவான் பார்த்தார்."அர்ச்சுனா ! நீயும் உன்னுடைய சகோதரரும் இந்த மண்ணுலகத்திற்கு வந்த நோக்கம் முடிவடைந்துவிட்டது.அதனாலே நீ கற்ற வித்தையெல்லாம் மறந்து விட்டாய்! இனிமேல் இந்த நிலவுலகத்திலே உங்களுக்கு வேலை யில்லை.நீங்கள் புறப்படலாம்!'' என்றார்.

அவருடைய உபதேசத்தின் படி பாண்டவர்கள் , பாஞ்சாலி கூட சொர்க்கத்தை நோக்கி புறப்பட்டார்கள். முறைப்படி இந்தப் புண்ணிய பூமி வலம் வந்து மேரு மலைக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கே இருந்த மணல் வெளிக்கு வந்து சேர்ந்ததும் பாஞ்சாலி முதலிலே மாண்டு மண்ணிலே விழுந்தாள்.'' திரௌபதி மரணமடைந்ததன் காரணமென்ன?'' என்று பீமன் கேட்டான் தர்மனிடம்.

தர்மர் பின்புறம் திரும்பாமலேயே பதில் சொல்கிறார். நம் ஐந்து பேரிலே அர்ச்சுனன் மீது மட்டும் அவள் அதிகளவான அன்பு வைத்திருந்தாள்.அவளுடைய பாரபட்சம் அவளைக் கொன்றது! அப்படி என்று சொல்லிக் கொண்டே தான் போகின்ற பாதையில் முன்னேறிக் கொண்டிருந்தார். கொஞ்சத் தூரத்திலேயே சகாதேவன் மடிந்து வீழ்ந்தான். இதற்கென்ன காரணம் என்று கேட்கின்றான் பீமன்.

'' சாஸ்திர ஞானத்திலே எனக்கு நிகர் யாருமில்லை என்கின்ற கல்விச் செருக்கினாலே அவன் இறந்து போனான்.!'' அப்படி என்று விளக்கம் கொடுத்தார் தர்மன். பின்புறம் திரும்பிப் பார்க்காமலே தன்னுடைய வழியிலே அவர் போய்க் கொண்டிருந்தார். அடுத்த படியாக நகுலன் விழுந்தான்.

" அவனுக்கு ,தான் மிகவும் அழகு என்கின்ற எண்ணம் உண்டு. தனது மேனியழகை பற்றிய அந்தத் தற்பெருமை தான் அவனை வீழ்த்திவிட்டது''அப்படி என்று அதற்கு விளக்கம் கொடுக்கின்றார் தர்மர். தொடர்ந்து போய்க்கொண்டிருக்கின்றார். கொஞ்ச நேரத்திலே அர்ச்சுனன் அடிபட்ட மான்போல் மாண்டு போகிறான். இதையும் திரும்பிப் பார்க்காமலே தன்னைத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்ற பீமனிடம் அதற்கான காரணத்தைச் சொல்கின்றார் தர்மர்! நடந்து முடிந்த பாரதப் போரிலே சுத்த வீரர்களுடைய கடமைகளை மறந்து விட்டான் இவன். தான் ஒருத்தனாகவே வீழ்த்த வேண்டும் என்று நினைத்தான்.அந்த வீராப்பு அவனை அழித்துவிட்டது என்றார். கொஞ்சத் தூரம் சென்றதும் வீமனும் கீழே விழ ஆரம்பித்தான்.

" அண்ணா எனக்கும் அழிவு காலம் ஆரம்பித்துவிட்டது என்னுடைய இறப்பிற்கான காரணம் என்ன?'' என்று மண்ணிலே வீழ்ந்து உருண்டு கொண்டே கேட்டான் பீமன்.'' உன்னுடைய உடல் வலிமையைப் பற்றிய எண்ணமே உன் அழிவுக்குக் காரணம்'' என்றார் தர்மர். சொர்க்கத்தில் காத்துக் கொண்டிருந்த இந்திரன் தர்மனிடம் கேட்கின்றான். ''மடிந்த உன்னுடைய மனைவி, மாண்டு போன உன்னுடைய சகோதரர்கள் இவர்களெல்லாம் மண்ணிலே விழுந்த பொழுது நீ திரும்பிக் கூட பார்க்காமல் முன்னேறிக் கொண்டிருப்பதற்கு என்ன காரணம்'' என்று கேட்கின்றான். அதற்குத் தருமர் அமைதியாக பதில் சொல்கிறார்.

உயர்ந்த நோக்கத்தை நாடிச்செல்லும் ஒரு மனிதன்,பந்த பாசத்திற்கு அடிமைப்பட்டோ அல்லது வேறு காரணத்திற்காகவோ தான் செல்லும் நோக்கத்தை மறந்து பின்னால் தான் நடந்து வந்த பாதையை திரும்பிப் பார்க்க முற்பட்டால் அவனுடைய முன்னேற்றம் தடைப்படும்! அவனுடைய எண்ணமும் ஈடேறாமல் போய்விடும்! இது தான் தர்மரின் பதில்.

சிந்திக்க வேண்டிய ஒரு கருத்துத்தான் இது. இந்தக் காலத்திலே நம் ஆட்கள் யாராவது இப்படி பின்னாடி வருபவர்களை திரும்பிப் பார்க்காமல் நடந்து போய்க் கொண்டு இருந்தால்... அவனுக்குப் பின்னாடி அவனுக்குக் கடன் கொடுத்தவன் வந்து கொண்டிருக்கின்றான் என்று அர்த்தம்!

ஒருநாள் எனக்கு முன்னாடி... என்னுடைய சிநேகிதன் ஒருத்தன் என்னைத் திரும்பிப் பார்க்காமல் நேரே விறைப்பாக போய்க் கொண்டிருந்தான். நான் ஓடிப்போய் அவன் கையைப் பிடித்துக் கொண்டு "ஏன்டா இப்படிப் பயப்படுகின்றாய்... ? ஏன். என்னிடம் நீ என்ன கடன் வாங்கியிருக்கின்றாயா என்று கேட்டான்.இப்பவும் அவன் பின்னாடி முகத்தைத் திருப்பாமல் பதில் சொன்னான்.

" உன்னிடம் நான் எதுவும் கடன் வாங்கவில்லை என்பது சரி. ஆனால் என்னிடம் கடன் வாங்கிய ஒருத்தன் இப்பொழுது என் முன்னாடி போய்க் கொண்டிருக்கின்றான். அவன் என் கண்ணிலிருந்து தப்பிவிடக் கூடாது என்பதற்காக நான் கழுத்தைத் திருப்பாமல் முன்னேறிக் கொண்டிருக்கின்றேன்.! ''அப்படி என்று சொல்லிக் கொண்டு முன்னாடி போகின்ற ஆசாமியைக் குறி பார்த்து நடந்து போகின்றான். வேட்டைக்கு போற மாதிரி!